Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவாகவும், துல்லியமாகவும்
உங்கள் இல்லங்களிலிருந்து
உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTERNET
மூலம் தொடர்பு கொள்ள
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை
Sri Murugan
Tele Communication & Agency post Office
303, K.K.S.ROAD JAFFNA T.P.021 - 22 2670
FAX - 222 3214 email-del-srnskr @ evreka.lk
(சி.1136)

மலர் : 01 திருவள ளுவர் ஆண்டு: 2034 ஆடி 23 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஜ.ஆகிர் 09 (08.08.2003) வெள்ளிக்கிழமை இதழ்: 309

## அத்துமீறிய 10 இந்திய மீனவர்கள் வடமராட்சி கடலில் மடக்கிப் பிடிப்பு

(வடமராட்சி)

வடமராட்சிக் கடற்பரப்பில் - அத்துமீறி கடற்தொழிலில் ஈடுபட்டிருந்த பதது இந்திய மீனவர்களும், அவர்களுடைய இரு ட்ரோலர்களும் மீனவர்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டன.

மீனவர்களை விடுவிப்பதற்கு இராணுவத்தினர், கடற்படை கண்காணிப்புக் குழுவினர் முயற்சித்த போதும் பலனளிக்கவில்லை.

இதனால், படைத்தரப்பினருக்கும், மீனவர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. பின்னர் - சில கோரிக்கைகளை முன்வைத்துப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு 10 மணியளவில் வடமராட்சிக் கடற்பரப்பை அண்டிய பகுதியில் வைத்து - இன்பருட்டி கடற் (10 ஆம் பக்கம் பார்கக)



பிடிக்கப்பட்ட இந்திய மீனவர்களை விடுவிக்கும் முயற்சியில் ஈடுபட்ட இராணுவ, கடற்படை அதிகாரிகள் மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினர்களை முதற்படத்திலும் - வடமராட்சிக் கடற்பரப்பில் பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

# புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் அடுத்த மாதத்திற்கு முன் ஆரம்பமாகும்!

## அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அறிவிப்பு

(கொழும்பு)

**விடுதலைப் புலிகளுடனான அரசாங்கதின் சமாதானப் பேச்சுவார்த்தை அடுத்த மாதத்துக்கு முன்னர் ஆரம்பிக்கப்படும் என, நீதி அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். அமைச்சரவைக் கூட்ட முடிவுகளை அறிவிக்கும் மாநாடு முடிவடைந்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

அரசு - சமாதானப் பேச்சு வார்த்தைகள் தொடர்பாக சட்டவாக்கம், அரசியலமைப்பு தொடர்பான ஆலோசனைகள் செய்யவுள்ளதாகவும்,

சமாதான முன்னெடுப்பு தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்தப்பட இருப்பதாகவும் - ஜி.எல்.பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

பாரிஸில், விடுதலைப் புலிகள் சட்ட ஆலோசனை செய்யவிருப்பதாக கிடைத்த செய்திகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஒஸ்லோ உடன்படிக்கையில் அரசு - விடுதலைப் புலிகள் இணக்கம் கண்ட விடயங்கள் சமஷ்டித்தீர்வு, யுத்தநிறுத்தம், அதிகாரப்பரவல் தொடர்பானவையாக உள்ளன என்றும் -

இடைக்கால திட்ட வரை (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பானிய விசேட தூதுவர் அகாஷி விரைவில் இலங்கை வருகின்றார்!

### பேச்சுக்களை மீள ஆரம்பிக்க முயற்சி

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மீண்டும் பேசசுவார்த்தையினை ஆரம்பிக்கும் பொருட்டு, ஜப்பானின் விசேட பிரதிநிதி யசூசி அகாஷி விரைவில் இலங்கைக்கு வரவுள்ளார்.

ஜப்பானில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இந்த விடயத்தை ஜப்பானின் உதவிச் சிரேஷ்ட வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிரான்சின் பாரிஸ் நகரில் நடைபெறும் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களின் சந்திப்பின் பின்னர் - இடைக்கால நிர்வாகம் தொடர்பான உரிய பதில் அரசாங்கத்துக்கு - விடுதலைப் புலிகளால் அனுப்பிவைக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இடைக்கால நிர்வாக யோசனை; சந்திரிகாவுடன் ரணில் பேச்சு!

(கொழும்பு)

வட-கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பாக பிரதமர் - ஜனாதிபதிக்கும், விடுதலைப் புலிகளுக்கும் அனுப்பிவைத்த திட்டவரைபு குறிதது, ஜனாதிபதியும் பிரதமரும் நேற்று பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இந்தப் பேச்சுவார்த்தையின் போது, ஏற்கனவே காணப்பட்ட வித்தியாசங்களின் காரணங்களை, ஜனாதிபதியிடம் பிரதமர் விளக்கியதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபைக்கான வரைபின் திருத்தங்கள் - விடுதலைப் புலிகளால் அனுப்பிவைக்கப்பட்ட பின்னர், அது பற்றி ஜனாதிபதிக்கு தெரிவிப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும், விடுதலைப் புலிகளின் பதில் இந்தமாதம் பிற்பகுதியில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினர் தென்னாபிரிக்காவுக்கு விஜயம்!

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினர் சமஷ்டி முறை பற்றி ஆராய்வதற்காக, இம்மாத இறுதிப் பகுதியில் தென்னாபிரிக்காவிற்குச் செல்லவுள்ளதாக, கொழும்புத் தகவலொன்று தெரிவிக்கிறது.

இக்குழுவினர் - அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துத் திரும்பியவுடன், வன்னியிலிருந்து புறப்படுவார்கள் எனவும் தெரியவருகின்றது.

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக, சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டிருக்கும் நிலையில் - புலிகள் தென்னாபிரிக்காவுக்கு, சமஷ்டி முறை பற்றி ஆராயச்செல்வது - முக்கியத்துவம் பெறுகின்றது.

ஏற்கனவே புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினர், பல ஐரோப்பிய நாடுகளுக்கு சமஷ்டி பற்றி ஆராயச் சென்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கடல் மோதல் தவிர்ப்பு திட்டவரைபு; கண்காணிப்புக் குழுவால் தயாரிப்பு!

### விரைவில் வெளியிடப்படும் என்கிறார் ஹொக்லண்ட்

(கொழும்பு)

கடற்பகுதி மோதல்களைத் தவிர்ப்பது மற்றும் கண்காணிப்புத் தொடர்பான புதிய திட்டவரைபு ஒன்றை போர்நிறுத்த கண்காணிப்புக் குழு தயாரித்திருப்பதாக, கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் ஹக்ர.்.ப் ஹொக்லண்ட தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் கடற் போக்குவரத்து, நடைமுறைகள் மற்றும் கடலில் ஏற்படக்கூடிய மோதல்களைத் தவிர்ப்பது, கடற்பகுதி போர்நிறுத்த கண்காணிப்பு நடவடிக்கைகள் என்பன போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக' - போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு புதிய திட்ட வரைபு ஒன்றை தயாரித்துள்ளது.

இது தொடர்பாக, அரசாங்கத் தரப்புடனும், விடுதலைப் புலிகளுடனும் நடத்தப்பட்ட பேச்சுக்களின் அடிப்படையிலே, கண்காணிப்பபுக் குழுவால் இந்த உடன்பாட்டு திட்ட வரைபு தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இந்த திட்டவரைபு - விரைவில் வெளியிடப்படும் என்றும், கண்காணிப் (10 ஆம் பக்கம் பார்க்க)

## குரங்குப்பாஞ்சான் விவகாரம் நோர்வேக்கு அறிவிக்கப்படும்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் - கிண்ணியா குரங்குப்பாஞ்சானில் அமைந்துள்ள முகாமை அகற்ற மறுப்புத் தெரிவித்துவருவது குறித்து, நோர்வேக்கு போர்நிறுத்த கண்காணிப்புக்குழு புகார் செய்யவுள்ளது.

கிண்ணியாவில் அமைந்த மணியரசன் குளம் முகாமை, தாம் கொடுத்த காலக்கெடுவிற்கு பின்பும் தொடர்ந்து வந்திருப்பதாகவும் - அது அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அமைந்துள்ளதெனவும் கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் ஹொக்லான்ட் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக - இலங்கை அரசிற்கும், நோர்வே அரசிற்கும் தாம் அறிவிக்க உள்ளதாகவும் அவர் கூறினார். பலமுறை இம்முகாம் அகற்றுவது தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கு அறிவித்தும் சாதகமான பதிலைத் தரவில்லை எனக் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவின் ( 10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 01360290 01360291
email . jaffna @ expoavi . com.
(சி -1139)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில்
உங்கள் தோழன்...

# யுவசக்தி முன்பள்ளி விளையாட்டு விழா!

மானிப்பாய் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும், யுவசக்தி சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும், யுவசக்தி முன் பள்ளிப் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா, இன்று பிற்பகல் 2.30 மணிக்கு சுதுமலை தெற்கு, அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மானிப்பாய் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் த.சிவலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சு.கணேசமூர்த்தி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். இவ்விழாவின் கௌரவ விருந்தினர்களாக - தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த சு.ஜெயராஜ், வலிகாமம் கல்வி வலய முறைசாரக் கல்விப்பணிப்பாளர் சி.சிவனேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்

## University of Jaffna Tender Notice

The Chairman, Tender Board, University of Jaffna will receive sealed tenders form Civil works contractors Grade M6 and above registered with (ICTAD) for 'Interior Decoration work - stage I, Auditorium at Faculty of Medicine, University of Jaffna.

Tender forms may be obtained from the Works Engineer (Civil), University of Jaffna until 20.08.2003 on producing registration book and receipt for the cash payment for the following tender fees at the shroff's counter of University of Jaffna.

(1) Refundable deposit - Rs. 40,000/=
(2) Non - refundable deposit - Rs.1000/=

Perfected tenders to be sent to reach the Chairman, Tender Board, University of Jaffna or deposited in the tender box kept at the Registrar's office, University of Jaffna on or before 03.09.2003 at 10.00 am.

Tender forms may be inspected by the tenderers free of charge at the Planning Branch of this University during office hours if necessary.

Registrar
University of Jaffna.

P.O Box 57,
Thirunelvely,
Jaffna.

(சி-1325)

## சித்த ஆயுர்வேத மாணவர் மன்றம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற-முதலாம் வருட மாணவர்களுக்கான வரவேற்பு ஒன்றுகூடல் நிகழ்வு தொடர்பாக, பிரசுரமான படத்தில் உரையாற்றுவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தவர் மாணவர் தலைவர் அல்ல என, லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மாணவர் மன்றம் தெரிவித்துள்ளது.

## வங்கியாளர் பரீட்சையில் சித்தி

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை மக்கள் வங்கியில் வங்கித் தொழில் பயிலுநராக பணிபுரியும் சிவபாதசுந்தரம் தர்சினி, வங்கியாளர் நிலையத்தினால் இந்த வருடம் நடத்தப்பட்ட - நிதியல் சான்றிதல் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார். இவர், இந்த பரீட்சையில்-3பி,3சி,பெறுபேறுகளைப் பெற்றுள்ளார்.

## சிறு விளம்பரம்

**தட்டச்சு வகுப்புக்கள்**

தமிழ்,ஆங்கில தட்டச்சு புதிய வகுப்புக்கள் 11.08.2003 ஆரம்பமாகின்றன. தொடர்பு: 8/1 அம்மன் வீதி, கந்தர்மடம்,யாழ்ப்பாணம். (சி-1319)


நிறஞ்சனாஸ் சங்கானை

சாருஹாசன், அஜித் நடித்த

**சாம்ராட் அசோகா**

(ஹிந்திப் படத்தின் தமிழாக்கம்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்

**RED SCORPION**

இரவுக் காட்சி. 8.45 (பு.நே)

(சி-1285)

ராஜா யாழ்ப்பாணம்.

14ம் திகதி வரை

மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி நடித்த A.V.M இன

பிரியமான தோழி



10.30, 2.30, 6.30

ரிக்கெற் முற்பதிவு செய்து கொள்ளலாம்.

இயக்கம்: விக்ரமன்

(சி-1284)


# பத்திரிகையாளர் சங்கக் கூட்டம்

(வண்ணை)

வட - இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் மாதாந்த விசேட கூட்டம், நாளை காலை 9 மணிக்கு, சங்கத் தலைவர் தலைமையில் சங்கத்தின் காரியாலயத்தில், இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில், வவுனியா ஊடகவியலாளர் பயிற்சிப் பட்டறைக்கு அங்கத்தவரைத் தெரிவுசெய்தல் உட்பட, பல முக்கிய விடயங்கள் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(111)


துரிதமாகவும், துல்லியமாகவும் உங்கள் இல்லங்களிலிருந்து உலகெங்கிலுமுள்ள உங்கள் உறவினர்களுடன் குறைந்த கட்டணத்தில் வெளிநாட்டு தொடர்புகளுக்கு நாடவும்

**சிறீ முருகன் தொலைத் தொடர்பு நிலையம்**

மற்றும்

முகவர் தபால் நிலையம்
303, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

T.P - 021 - 222 2670 Fax - 021 222 3214
e-mail - jel - smskr @ eureke.lk

(சி-1312)


## யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து) திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்

## பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் பின்வரும் நிரந்தரப் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எமது சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்களை அலுவலக வேலை நாட்களில் ரூபா10/- செலுத்திப் பெற்று பூர்த்தி செய்து 21.08.2003 ஆம் திகதி பி.ப.4.00 மணிக்கு முன்பு கிடைக்கத்தக்கதாக **பொதுமுகாமையாளர், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்** என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

**1. பதவி:** விற்பனை உதவியாளர் (நிரந்தரம்)

**2. பதவி இல. :** 165/88 இன் படி குறி: 308/15

**3. சம்பளத்திட்டம:** 31/99 இன் படி 3500 - 65x10-70x10-4850

**4. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

(அ) கூட்டுறவுச் சங்க ஊழியர் 17 ஆம் சம்பளத்திட்டத்தில் விற்பனை உதவியாளர் பதவி ஒன்றில் ஐந்து வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் (சாதாரண தரம்) சான்றிதழ்/க.பொ.த. (சாதாரணதரம்) சான்றிதழ் எண்கணிதம்/வர்த்தக எண்கணிதம்/கணிதம் மற்றும் சிங்களமொழி/தமிழ்மொழி உட்பட 6 பாடங்களில் சித்தி

**5. வயது:**

விண்ணப்பதாரிகள் 21.08.2003 இல் 18 வயதிற்கு குறையாதவர்களாயும், 45 வயதிற்கு மேற்படாதவர்களாயும் இருத்தல் வேண்டும்.

**6. பொது நிபந்தனைகள்:**

1. யாழ்.மாவட்டத்தில் இரண்டு வருடங்களுக்கு மேலாக வசித்தமையை உறுதிப்படுத்துவதற்குச் சான்றிதழ் சமர்ப்பிதல் வேண்டும்.
2. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு பிரமாணங்களுக்கு அமைவாக நிர்வாகத்தினால் விதிக்கப்படும் பிணையைச் செலுத்துதல் வேண்டும்.
3. ஆட்சேர்ப்புச் செய்யப்படுபவர் இரண்டு வருடகால தகுதிகாண் காலப்பகுதிக்கு அமைந்தவராதல் வேண்டும்.
4. கல்வித் தகைமைகள், அனுபவம், வயது, வதிவிடத்தை உறுதிப்படுத்தல், நற்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இதற்கமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
5. தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன், அவர்கள் பதவிகளுக்காக விண்ணப்பிக்கும்போது தமது விண்ணப்பங்களைச் சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்புதல், விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கும், தெரிவு செய்யப்பட்ட பின்னர் அது வெளிப்படுமிடத்து நியமனத்தை இல்லாதொழிப்பதற்கும் வழிவகுக்கும்.
6. விண்ணப்பத்தில் காட்டப்படும் தகவல்களும், இணைப்புக்களும் உண்மையானதும், செம்மையானதுமென உறுதிப்படுத்துவதோடு, ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில், இதில் ஏதேனுமொன்று பிழையானதெனவோ அல்லது பொய்யானதெனவோ காணப்படுமிடத்து நஷ்டஈடு பெறாது உடனடியாக பதவி நீக்கம் செய்யப்படுவீர்கள் என்பதனை தாங்கள் அறிந்து கொள்ளவேண்டும்.

**பொதுமுகாமையாளர்.**

(சி-1324)

# வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள தொழிற்சாலைகளின் பணிப்பாளர்களுக்கான பயிற்சி வாய்ப்புக்கள்

தொழில்முயற்சி அபிவிருத்தி கைத்தொழில் கொள்கை மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சானது, வர்த்தக மற்றும் கைத்தொழில் மன்றுகளுடன் இணைந்து கைத்தொழில் துறை அபிவிருத்தியினைப் பேணி வளர்ப்பதற்கும் அதற்கு உதவியளிப்பதற்குமாக வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள தொழிற்சாலைகளின் பணியாளர்களுக்கான பயிற்சி வாய்ப்புக்களை வழங்குவதற்கு எண்ணியுள்ளது. இந்தப் பயிற்சியானது நாட்டின் தென்பகுதியிலுள்ள நல்ல முறையில் தாபிக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளில் வழங்கப்படும். தற்போது கீழ்மட்ட முகாமைத்துவத்தோடும், கீழ் மட்டத்திலிருந்து திறமைசார் தொழிலாளர்கள் வரையிலுமான பயிற்சியும், தொழில்சார் தெரிவுகளைப் பெறக்கூடிய வாய்ப்புக்களும் வழங்கப்படமுடியும். இந்நிகழ்ச்சித் திட்டத்தின் பின்னாலுள்ள நோக்கு என்னவெனில் பணியாளர்களுக்கு வேறுபட்ட சூழலில் வேலை செய்யும் வாய்ப்பினை வழங்குவதும், மானிட மூலவள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினூடாக நட்பினை மேம்படுத்துவதுமாகும்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தொழிற்படும் தொழிற்சாலைப் பணியாளர்களிடமிருந்தும், வட - கிழக்கு வர்த்தக மற்றும் கைத்தொழில் மன்றங்களின் உறுப்பினர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பின்வரும் வடிவில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் அந்தந்தப் பணிகொள்வோர் ஊடாக அல்லது வர்த்தக மற்றும் கைத்தொழில் மன்றத்தினூடாக 2003 ஆகஸ்ட் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக தலைவர், மீளிணக்க நிகழ்ச்சித் திட்டத் திற்கான கூட்டிணைப்பு செயலணி, தொழில் முயற்சி அபிவிருத்தி, கைத்தொழில் கொள்கை மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு, 73/1, காலி வீதி, கொழும்பு - 03 என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கலாம்.

தலைவர்
மீளிணைக்க நிகழ்ச்சித் திட்டத்திற்கான செயலணி
தொழில் அபிவிருத்தி, கைத்தொழில் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு
அமைச்சு,
73/1, காலி வீதி
கொழும்பு - 03.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

**வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள தொழிற்சாலைகளின் பணிப்பாளர்களுக்கான பயிற்சி வாய்ப்புக்கான விண்ணப்பம்**

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :..............................
2. வயது :..............................
3. பால் :..............................
4. தகைமைகள் :..............................
5. முகவரி :..............................
6. தாபனத்தின் பெயரும் முகவரியும் :..............................
7. தாபனத்தின் வகை :..............................
8. தற்போதைய பதவியும் கடமைகளும் :..............................
9. தேவைப்படும் பயிற்சியின் விபரங்கள் :..............................
   1) துறை :..............
   2) என்ன மட்டம், வகை :..............

..............................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி
சிபாரிசு

..............................
நிறுவனத் தலைவர்

வர்த்தக கைத்தொழில் மன்றத்தின் சிபாரிசு

..............................
வர்த்தக/கைத்தொழில்
மன்றத்தலைவரின் கையொப்பம்

(சி-1328)

# பொதுத்தேர்தல் நடப்பதற்கு முன்னர் சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி கூட்டணி!

## அமையும் என்கிறார் மைத்திரிபால



(கொழும்பு)

எதிர்காலங்களில் நடைபெறவுள்ள எந்தவொரு தேர்தலுக்கும் முன்பதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் கூட்டணி ஒன்று அமைக்கப்படும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

மாகாணசபைத் தேர்தலுக்கே முதன்முதலில் முகங்கொடுக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளதாகவும், அடுத்த வருடம் சில மாகாண சபைகளின் ஆயுட்காலம் நிறைவு பெறவுள்ளதாகவும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

குறிப்பிட்ட மாகாணசபைகளின் ஆயுட்காலம் நிறைவுபெறமுன்னர், அந்தச் சபைகள் கலைக்கப்படுமா என்று கேட்டபோது, அது தொடர்பாக இன்னும் ஆராயப்படவில்லை என, அவர் கூறினார்.

எவ்வாறாயினும், எந்தவொரு தேர்தல் நடைபெற்றாலும், அதில் தமது கட்சி வெற்றி பெறுவது நிச்சயம் என அவர் கூறினார்.

இதேவேளை, மாகாணசபைத் தேர்தல்களுக்கு முன்பதாகத் தேர்தலில் போட்டியிடும் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கான விசேட செயற்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக, பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச்செயலாளர் டி.எம். ஜயரத்ன இதனை உறுதி செய்தார்.

# வேலையில்லா பட்டதாரிகளுக்கு விரைவில் தீர்வு கிடைக்குமாம்!

## கூட்டமைப்பினரிடம் ரணில் உறுதி

பட்டதாரிகளின் வேலையில்லாப் பிரச்சினைக்கு, அடுத்த வரவு-செலவுத்திட்டத்தில் தீர்வுகாணப்படும் என்று, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

எனவே, பட்டதாரிகள் ஒன்றியம் போராட்டங்களில் ஈடுபடாது ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று, நேற்றுமுன்தினம் பிரதமருடன் இடம்பெற்ற சந்திப்பின்போது வேண்டுகோள் விடுக்கப்பட்டதாக, அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் மற்றும் தனியார் துறைகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்பும்போது, மட்டக்களப்பு மாவட்ட பட்டதாரிகளுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும் என்றும், பிரதமர் தெரிவித்ததாக, அவர் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பில்- மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியத்தின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

### ஆன்மீக தொடர் நிகழ்வு

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ். மாவட்ட பிராந்திய அலுவலகம் நாடாத்தும் ஆன்மீக நிகழ்வுகளின், 28 ஆவது தொடர் நிகழ்வு இன்று பிற்பகல் 5.30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோவில் நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காரை எம்.பி.அருளானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலய அதிபர் கவிமணி ஆனந்தராஜா 'அன்புக்கோர் கண்ணப்பர்' என்ற தலைப்பில் உரையாற்றவுள்ளார்.(ச)

## விடுதிப்பிரச்சினை தீர்க்கப்படும்வரை

# பல்கலைக்கழக மாணவர்களுக்கு கொடுப்பனவு வழங்க ஆலோசனை!

பல்கலைக்கழக மாணவர்களுக்கான விடுதி வசதி தொடர்பான பிரச்சினைகளுக்கு, நீண்டகாலத் தீர்வு காணப்படும்வரை- அந்த மாணவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவு ஒன்றை வழங்குவதற்கு கவனம் செலுத்துமாறு, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களின் பிரச்சினைகள் தொடர்பாக - பல்கலைக்கழக உபவேந்தர்களுடன் நேற்று நடத்திய பேச்சுவார்த்தைகளின்போதே - ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

விடுதிகள் அமைப்பதில் அரசாங்கத்திற்குப் பெருமளவு செலவினங்கள் ஏற்படுவதால், மாணவர்களுக்குக் கொடுப்பனவு வழங்குவது உசிதமாக இருக்கும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது. (01)

# கண்ணிவெடி அகற்றும் பணியில் நாற்பது தென்பகுதி இளைஞர்கள்

தென்பகுதியைச் சேர்ந்த 40 இளைஞர்கள் வடக்கு - கிழக்கில் கண்ணிவெடியகற்றும் பணியில் இணைந்து செயற்படவுள்ளனர்.

இந்தியாவைச் சேர்ந்த கண்ணிவெடியகற்றும் தேர்ச்சிபெற்றவர்களால், இந்த இளைஞர் குழுவுக்குப் பயிற்சிகொடுக்கப்பட்டு வருகின்றது.

ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட கண்ணிவெடிகள், வடக்கு - கிழக்கில் புதைக்கப்பட்டுள்ளதால், வடக்கில் முழுமையாக கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு நீண்டகாலம் தேவைப்படும் எனத் தெரியவருகின்றது.

# வடமத்திய, மேல்மாகாண சபைத் தேர்தல் பொ.ஐ.மு. பொதுப்பட்டியலில் போட்டியிடும்!

## செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்

(கொழும்பு)

அடுத்தவருடம் பெப்ரவரி மாதம் நடைபெறவிருக்கும் மேல்மாகாண, வடமத்திய மாகாணசபைத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி பொதுப்பட்டியலில் போட்டியிட வேண்டும் என்றும் இது குறித்தும் பொது வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்படவேண்டும் என்றும் அண்மையில் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கலந்துகொள்ளவில்லை. இது சம்பந்தமாக ஜனாதிபதியுடன் கலந்தாலோசிக்கவேண்டும் என்றும் அங்கு தீர்மானிக்கப்பட்டது.

அரசாங்கம் அமைக்க உத்தேசித்துள்ள தேர்தல் சீர்திருத்தம் தொடர்பான, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அரசாங்கம் உடனடியாக நியமிக்கவேண்டும். அத்தெரிவுக் குழுவுக்கு மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ குணவர்த்தன தலைவர் பொறுப்பேற்க வேண்டும் என்றும், செயற்குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இக் கூட்டத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியில் உள்ள பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

# கைத்தொழில் கண்காட்சிக்கான விண்ணப்ப முடிவு திகதி அறிவிப்பு

(கொழும்பு)

தொழிற்துறைத் திணைக்களத்தினூடாக நடாத்தப்படுகின்ற கைத்தொழில் கண்காட்சியில் பங்குபற்ற விரும்புபவர்களுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி, எதிர்வரும் 10 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

வடகிழக்கு மாகாண ரீதியாக நடாத்தப்படவுள்ள இப்போட்டி - வருடாவருடம் ஒவ்வொரு மாவட்டத்திலும் நடாத்தப்பட்டு வருகின்றபோதும், நீண்டகாலத்தின் பின் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிகளில் சிறப்பாகத் தெரிவுசெய்யப்படும் மூன்று பொருட்களுக்குப் பணப்பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இதேவேளை, கொழும்பில் ஒக்டோபர் மாதம் தேசிய அருங்கலைகளின் பேரவையின் மத்திய கைப்பணிச் சபையால் நடத்தப்படும் தேசிய மட்டப் போட்டிகளில், மாகாண மட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் கைப்பணிப் பொருட்கள் - காட்சிக்கு வைக்கப்பட்டு வெற்றி பெற்றால், ஜனாதிபதியின் பரிசில்களும் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# 'விஸா' இல்லாது வெளிநாடுகளுக்கு அமெரிக்காவூடாக செல்லமுடியாது!

## இராஜாங்க அமைச்சு தடைவிதிப்பு

அமெரிக்காவின் ஊடாகச் சர்வதேச நாடுகளுக்குப் பயணங்களை மேற்கொள்ளும் பிரயாணிகளுக்கு, 'விஸா' இன்றிப் பயணத்தை மேற்கொள்வதை, அமெரிக்கா இராஜாங்க அமைச்சகமும், உள்நாட்டுப் பாதுகாப்புத் திணைக்களமும் தடைசெய்துள்ளது.

இதுவரை - அமெரிக்காவின் ஊடாக எந்தவொரு சர்வதேச நாட்டுக்கும் மேற்கொள்ளும் பயணத்திற்கு, 'விஸா' பெற்றுக்கொள்ள வேண்டியதில்லை. ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதியிலிருந்து இந்த விஸா ஒழுங்கு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. அமெரிக்கப் பிரஜைகளுக்கும், விஸா இன்றி அமெரிக்காவிற்குப் பிரயாணம் செய்யக்கூடிய நாட்டு பிரஜைகளுக்கும், இந்த நடைமுறையிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

இலங்கை, மாலைதீவு ஆகிய நாடுகளின் பிரஜைகளுக்கு இந்த விஸா ஒழுங்குமுறை மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தமாட்டாதென, இலங்கையிலுள்ள அமெரிக்காவின் தூதுவராலய- அதிகாரி மார்க் எச். வில்லியம் குறிப்பிட்டார்.

இந்த விஸா ஒழுங்குமுறை- விமான நிலையங்கள், விமானங்கள் ஆகியவற்றிற்குக் கூடுதல் பாதுகாப்பை ஏற்படுத்தும் நோக்கில், செப்ரெம்பர் 11 ஆம் திகதிக்குப் பின் ஏற்படுத்தப்பட்ட பாதுகாப்பு ஒழுங்குகளில் ஒன்றாகும்.

செப்ரெம்பர் 11 இல் நடந்த தாக்குதலின் பின் - விமானியின் அறைக்குள் செல்லும் கதவுகள் பலப்படுத்தப்பட்டன. விமானத்துள் பணியில் ஈடுபடுபவர்களுக்குப் போரிடும் பயிற்சியும் கொடுக்கப்பட்டிருந்தது. பிரயாணிகளும் உடமைகளும் நன்கு பரிசோதிக்கப்பட்டன. இவைகள் - தீவிரவாதிகளின் தாக்குதலிலிருந்து தடுக்குமுகமாகவே ஏற்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### வன்னிக்கு 30 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

இவ்வாண்டுக்குரிய பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத் திட்டத்திலிருந்து, வன்னி மாவட்டத்திற்கு 30 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் வவுனியா மாவட்டத்திற்கு 13.3 மில்லியன் ரூபாவும், மன்னார் மாவட்டத்திற்கு 10.3 மில்லியன் ரூபாவும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 3.9 மில்லியன் ரூபாவும், வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் வாழும் பிற மாவட்டங்களுக்கு 2.5 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# மூதாளர் பேண நல நிதிக்காக வவுனியாவில் வீரதீரச் செயல்

கிளிநொச்சி அன்புச்சோலை மூதாளர் பேணநல நிதிக்காக, வடமராட்சி - பொலிகண்டி பொலிகை ஒற்றுமை விளையாட்டுக்கழக வீரர்களினால், வீரதீர சாகச நிகழ்வுகள் அண்மையில் நடாத்தப்பட்டன.

வவுனியா மாவட்ட சமுதாய முன்னேற்ற நிலையம் ஏற்பாடு செய்த இந்த வீரதீரசாகச நிகழ்வுகள் - கடந்த வியாழனன்று வவுனியா நகர மைதானத்தில் நடைபெற்றன.

இந்நிகழ்வுகளில் வைத்தீஸ்வரன் கேதீஸ்வரன் என்ற வீரன் தனது உடலுக்கு மேலாக ஐம்பது உழவு இயந்திரங்களை ஏற்றி சாதனை படைத்தார். தங்கவேல் விஜயகுமார் என்ற வீரனின் இருகால்களுக்கு மேலாகவும், சமநேரத்தில் இரு உழவு இயந்திரங்கள் ஏற்றப்பட்டன. இதேவேளை, தங்கவேல் சுஜந்தினி என்ற பெண் வீராங்கனை தனது உடலுக்கு மேலாக கன்ரர்ரக வாகனத்தை ஏற்றி சாதனை படைத்தார். சிவானந் தம் சுமணா என்ற சிறுமி பல வீரதீர விளையாட்டுக்களைச் செய்து பார்வையாளர்களின் பாராட்டைப் பெற்றார். 122.



புலோலியூர் கந்தமுருகேசனாரின் 101 ஆவது பிறந்ததின விழாவையொட்டி கனடாவில் நடாத்தப்பட்ட விழாவில் நடன நிகழ்ச்சியில் பங்கேற்ற சிறுமிகளைப் படத்தில் காணலாம்.

# ஜனவரி மாதத்தில் இருந்து மக்கள்வங்கி தனியார்மயம்

(கொழும்பு)

மக்கள் வங்கி - எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் தனியார்மயமாக்கப்படவுள்ளதாக, மக்கள் வங்கியின் தலைவர் 'லால் நாணயக்கார' தகவல் வெளியிட்டுள்ளார்.

அரசாங்கத்திற்கு 59 வீதமும், தனியாருக்கு 41 வீதமும் என, இருந்த முன்னைய நிலைமை மாறி, இனிவரும் காலங்களில் முழுமையாக - தனியார்வசம் மக்கள் வங்கி ஒப்படைக்கப்படவுள்ளதாக, அவர் குறிப்பிட்டார்.

வங்கித்துறையின் முன்னேற்றம் கருதியும், வாடிக்கையாளர்களின் நலன்களைப் பேணுவதும், இந்த நடவடிக்கையின் பிரதான நோக்கமாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் வங்கி - கடந்த 6 மாதங்களில் தேறியஇலாபமாக, 100 கோடி ரூபாவைப் பெற்றுள்ளது என்றும், 11,800 பேர் உத்தியோகத்தராயிருந்துள்ளனர். 2003 ஜனவரியில் 10,500 பேர் வங்கியில் பணிபுரிகின்றனர் என்றும், தெரிவித்தார். உத்தியோகத்தர்களின் பற்றாக்குறைக்கு - ஓய்வூதியம் பெற்றவர்களும், புதிதாக எவரும் சேர்த்துக் கொள்ளப்படாமையும் காரணமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், மக்கள் வங்கி நட்டமடையாத ஒரு நிலையில், அரசின் பங்குகளை முழுமையாகத் தனியாருக்கு ஒப்படைப்பதே, மக்கள் வங்கி தனியார்மயமாக்கப்படுவதன் நோக்கமாக அமைவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# தமிழில் பெயர் இடுவதன் மூலம் தமிழனாக அடையாளம் காட்டலாம்!

## தமிழீழ நிதித்துறை பொறுப்பாளர் தமிழேந்தி தெரிவிப்பு

தமிழர்கள் தமது பெயர்களைத் தமிழில் வைத்துக்கொள்ளவேண்டும் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டுதான், 1992 ஆம் ஆண்டு மிகவும் சிறிய கையேடு ஒன்றை வெளியிட்டோம். அதன்பின் பெருந் தொகையான பெயர்களுடன் நிறைவான ஒரு நூலை வெளியிடவேண்டும் என நாங்கள் விரும்பினோம். எல்லாத் தமிழர்களும் தமிழிலே பெயரை வைத்துக்கொள்ளவேண்டும் என்ற எங்கள் வெளிப்பாடாகவே இந்த நூலைக் கொண்டுவரவிரும்பினோம்.

இவ்வாறு கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற, தமிழ்ப் பெயர்க் கையேடு நூல் வெளியீட்டு விழாவில் தலைமைதாங்கி உரையாற்றிய, தமிழீழ நிதித்துறை பொறுப்பாளர் செ.வ.தமிழேந்தி உரையாற்றினார்.

அவர் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையல் - பொதுவாக மேல் நாட்டவரைப் பொறுத்தவரையில் அவர்களது பெயரை வைத்தே, அவர்கள் யார் என்பதைக் கண்டறிய முடியும் ஆனால், எங்களைப் பொறுத்த வரை அதுமுடியாத ஒன்றாக இருக்கிறது. நாங்கள் சிங்களவரா? தமிழரா? ஆங்கிலேயரா? எதுவுமே எங்களுக்குப் புரியாமல் இருக்கிறது.

இந்நிலை மாறி, தமிழருடைய பெயரைவைத்து, இவர் தமிழரா? இல்லையா? என்பதை அறிந்து கொள்ளக்கூடிய வகையில் ஒரு நூலை வெளியிடவேண்டும் என விரும்பினோம்.

யாழ்ப்பாண இடப்பெயர்வில் அதாவது, வலிகாமத்திலிருந்து தென்மராட்சிக்கு இடம்பெயர்ந்து வந்தபோது, இந்த நூலை எப்படி ஆக்குவது என எண்ணி, அதனுடைய தொடக்க முயற்சிகளை மேற்கொண்டோம். பின்னர், வன்னிக்கு இடம் பெயர்ந்து வந்தபோது, பேராசிரியர் சண்முகதாஸ், அவரது துணைவியார் மற்றும் பண்டிதர் பரந்தாமன், இளங்குமரன் ஆகியோர் இணைந்து இந்த முயற்சியைச் செய்தோம்.

இந்நூல் 46000 பெயர்களைக் கொண்ட ஒரு நூலாக வெளிவந்துள்ளது. 1992 ஆம் ஆண்டு தொடக்கப்பட்ட முயற்சி, 2003 ஆம் ஆண்டு நிறைவு பெற்றுள்ளது.

நாம் எங்களுடைய விடுதலைப் போராட்டப்பணிக்கிடையே இந்தப் பணியைச் செய்திருக்கிறோம். தமிழ் அறிஞர்கள் பலர் முன்வருவார்களேயானால், இப்படிப் பல நூல்களை வெளியிடலாம். தமிழர்கள் தங்களுடைய பெயரைத் தமிழில் இட்டு, தம்மை அடையாளம் காட்ட அது வழிவகுக்கும் எனவும் அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

(17)

கூட்டுறவுச் சங்கங்கள்

# காலத்தின் தேவை கருதி மக்கள் துயர் துடைத்தன

## கூட்டுறவு தின விழாவில் இளஞ்சேரன்

மிக அருகிய வளங்களைக் கொண்ட கூட்டுறவு நிறுவனங்கள்- காலத்தின் தேவைகருதி, மக்களின் துயர்துடைக்கும் பணிகளைச் செய்து வந்தன என, நிர்வாகசேவைத் துணைப் பொறுப்பாளர் இளஞ்சேரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்ற 81 ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், அவர் மக்கள் இராணுவ நடவடிக்கைகளால் புலம்பெயர்ந்த வேளைகளில், அவர்களுக்குப் பிரயாண, இருப்பிட வசதிகளைச் செய்து, போர்க்காலத்தில் மக்கள் சேவையில் ஈடுபட்டு மக்களின் மதிப்பைப் பெற்றவையாக விளங்குகின்றன.

கூட்டுறவு நிறுவனங்கள் இன்று திறந்த சந்தையில் போட்டி போடுவதுடன், மக்களின் தேவைகளை இனங்கண்டு, சேவை நோக்கோடு செயற்படத் தம்மைத் தயார்படுத்த வேண்டும் எனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவுச்சங்கத் தலைவர் அ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மேலதிக அரசாங்க அதிபர் ந.வேதநாயகனும் கலந்து கொண்டார்.



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் - கனடா பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வில் - பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பழைய மாணவயும், பாடசாலையின் பிரதி அதிபருமான தனம் வேலுப்பிள்ளை உரையாற்றுவதையும், கனடா பழைய மாணவர் சங்கத் தலைவி எஸ்.அருளானந்தம் அருகில் அமர்ந் திருப்பதையும் படத்தில் காணலாம். (17)

# வங்கியின் நடைமுறைகள் தொடர்பாக செயலக ஊழியர்களுக்கு விளக்கம்!

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் சேமிப்பு மற்றும் நடைமுறைக் கணக்குகள் சம்பந்தமாகவும், அவற்றிலுள்ள சலுகைகள், இலாபங்கள் சம்பந்தமாகவும்- மக்கள் வங்கி பிரதான வீதிக் கிளையைச் சேர்ந்த எஸ்.சுபசீலன், யாழ். மாவட்டச் செயலக நிதிக்கிளை மற்றும் கிளைகளைச் சேர்ந்தோருக்கு விளக்கமளித்துள்ளார்.

அரச அலுவலர்கள் - வங்கித் தேவைகளுக்காக வங்கிக்குச்சென்று, அலையும் நிலையை நிறுத்தும், முகமாகவே, வங்கி அலுவலர்கள் நேரடியாக அலுவலகங்களுக்கு வந்து, அவர்களது தேவையை நிறைவு செய்து தருவார்கள் எனவும், சம்பளத் திகதியன்றோ அல்லது அதற்கு அண்மித்தோ சேமிப்புத் தொகையைப் பெறுவதால், ஊழியர்கள் பெரிதும் பயனடைவார்கள் எனவும் தெரிவித்தார்.

வங்கிகள் தனியார்மயப்படுத்தப் பட்டால், வாடிக்கையாளர்களுக்குப் பாதிப்பு ஏற்படுமா என, அலுவலர் ஒருவர் வினவியபோது - அவ்வாறு ஏற்பட்டால், வங்கி அலுவலர்களது நலன்களில் மாற்றம் ஏற்படலாமே தவிர, வாடிக்கையாளர் நலன்களிலோ, கணக்குகளிலுள்ள சலுகைகளிலோ எவ்வித மாற்றமும் ஏற்படாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (24)

அதிபர்கள் - ஆசிரியர்கள்

# சம்பள ஆணைக்குழுவின் அறிக்கை வெளியாகியது

ஆசிரியர்கள், அதிபர்களின் சம்பளத் திட்டத்தை ஆராய, 2000 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட திஸ்ஸ தேவேந்திரா சம்பள ஆணைக் குழுவின் அறிக்கை வெளியாகியுள்ளது.

31.12.2002 எனத் திகதியிடப்பட்டு வெளியிடப்பட்ட இந்தச் சம்பள அறிக்கையின்படி, ஆசிரியரின் அதிகுறைந்த மாதச் சம்பளம் 7315 ரூபாவாகவும், அதிபரின் ஆகக் குறைந்த சம்பளம் 9865 ரூபாவாகவும் இருக்க வேண்டுமென்றும் பரிந்துரைத்துள்ளது.

ஆசிரியரின் அதிகூடிய சம்பளம் 21,300 ரூபாவாகவும், அதிபரின் அதிகூடிய சம்பளம் 32,250 ரூபா எனவும் பரிந்துரைத்துள்ளது.

கல்வி நிர்வாக சேவையினரின் அதிகுறைந்த சம்பளம் 12,820 ரூபா எனவும், அதிகூடிய சம்பளம் 32,250 ரூபாவாகவும் இருக்கவேண்டும் எனவும் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. (122)

# மன்னார் அணியுடனான மோதலில் யாழ்ப்பாண அணி வெற்றிபெற்றது!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கிரிக்கெட் அணிக்கும், மன்னார் மாவட்ட கிரிக்கெட் அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியொன்றில்- மன்னார் அணியை, யாழ்.அணி எட்டு விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மன்னார் மாவட்ட அணி - சகல விக்கெட்டுக்களையும் இழந்து, 72 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். அணி இரண்டு விக்கெட் இழப்பிற்கு, 74 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

யாழ். அணியைச் சேர்ந்த அகிலன் 27 ஓட்டங்களுக்கு, 4 விக்கெட்டுகளையும், லவேந்திரா 10 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், உமாகாந் மற்றும் பிரகாஷ் தலா ஒவ்வொரு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### மெய்வல்லுநர் போட்டி

(நெடுந்தீவு)

தென்னிந்தியத் திருச்சபையின் நெடுந்தீவு மேற்கு - பகல் பராமரிப்பு நிலைய சிறார்களின் மெய்வல்லுநர் போட்டி, இன்று பிற்பகல் 2.30 மணிக்கு பராமரிப்பு நிலையத்தின் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் - தீவக முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் த.தவராசா பிரதமவிருந்தினராகவும், திட்டப்பணிப்பாளர் வி.மித்திரஞ்சன் சிறப்பு விருந்தினராகவும், நவாலி தென்னிந்தியத் திருச்சபையைச் சேர்ந்த ஏ.எஸ்.ரி.தேவகுணானந்தன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (113)

### தண்டப் பணமாக 20 ஆயிரம் ரூபா!

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோத கசிப்புத் தயாரிக்கும் தளபாடங்கள் மற்றும் உடைமைகள் வைத்திருந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், ஐயாயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்தும்படி, யாழ்.நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த ஒருவருக்கு - யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் மு.திருநாவுக்கரசு இத்தீர்ப்பினை வழங்கினார்.

### ஆறாவது நாளாக உண்ணாவிரதம்

(கொழும்பு)

அவசரகால சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதியொருவர் தன்னை விடுதலை செய்யுமாறுகோரி, நேற்று முன்தினம் ஆறாவது நாளாகவும் உணணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்

இதேவேளை - இவர் சம்பந்தமாக சட்டமா அதிபர், மேல் நீதிமன்ற நீதிவானுடன் பேச்சுவார்த்தை நடத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக, சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

# ஜப்பான் - அம்டா மருத்துவக்குழுவினரின் மாவட்டக் காரியாலயம் திறந்து வைப்பு!

(யாழ்ப்பாணம்)

ஜப்பான் - அம்டா மருத்துவக் குழுவினர், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸின் அனுசரணையுடன் கடந்த சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் கொழும்புத்துறை துரையப்பா மகா வித்தியாலயத்தில் நடாத்திய மருத்துவ முகாமில், 400 இற்கும் அதிகமானோர் பங்குபற்றியதுடன், பலருக்கு எக்ஸ்ரே படங்களும் எடுக்கப்பட்டுச் சிகச்சையளிக்கப்பட்டது.

இதேவேளை, அம்டா அமைப்பின் மாவட்ட காரியாலயம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள, ஆசீர்வாதம் வீதியில் திறக்கப்பட்டுள்ளதாக நிறுவன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (111)

# இளைஞர் கழகத்துக்கு கணினிகள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் புனித அந்தோனியார் இளைஞர் கழகத்தினருக்கு - பிரான்ஸ் பாஷையூர் அபிவிருத்திச் சங்கத்தினரால் இரண்டு கணினிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 23 ஆம் திகதி இளைஞர் கழக காரியாலயத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு - பிரான்ஸ் பாஷையூர் அபிவிருத்திச் சங்கத்தின் உபதலைவர் கொன்சலஸ் கலந்து கொண்டு, கணினிகளை இளைஞர் கழகத் தலைவர் வின்சனிடம் கையளித்தார். இந்த நிகழ்வில் பாஷையூர் பங்குத் தந்தையும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (119)

வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்



பெயர் : ந.கிருத்திகா
முகவரி : இல:10,
பெரியதம்பிரான் கோயில் வீதி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:----------
முகவரி :----------
பிறந்த ஆண்டு:----------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
----------
பெற்றார் ஒப்ப..



# சிறந்த உளநலப் பயிற்சி; தலைமைத்துவத்துக்கு அவசியம்!

**ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கும் சுகவாழ்வு நிலையத்தின் பெண்கள், சிறுவர்களுக்கான உளநல சமூக மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் - பெண்களைக் குடும்பத் தலைவர்களாகக் கொண்ட பெண்களுக்கான தலைமைத்துவம் மற்றும் தற்துணிவு என்பவற்றை வளர்ப்பதை நோக்காகக் கொண்டு, உளவள ஆலோசனைகளை வழங்கிவரும் லலிதா, வாணி, வனஜா ஆகியோருடனான சந்திப்பு....**

**லலிதா - அச்செழு**

அச்செழுவில் 48 விதவைப் பெண்கள் இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக 45 வயதிற்குட்பட்ட பெண்களுள்- 36 பேர் எங்களிடம் வந்து உளநலப் பயிற்சியைப் பெறுகிறார்கள். இந்த 36 பேருக்கும் இருகின்ற பெரும்பாலானதும், பொதுவானதுமான பிரச்சினை - பொருளாதாரப் பிரச்சினைதான். இவர்களுக்கு நாலுக்கும் குறையாத பிள்ளைகள் இருக்கிறார்கள். அதிலும் 12 வயதிற்குட்பட்ட பிள்ளைகளையுடைய குடும்பங்கள்தான் நிறைய இருக்கிறது.



நாங்கள் இப்படியான விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் போன்ற பெண்களைச் சந்திக்கப் போகும்போது, அவர்கள் எங்களிடமிருந்து எதிர்பார்க்கிறது, பொருளாதார உதவிகளை. ஆனால், எங்களுடைய ஸ்தாபனம் பொருளாதார உதவிகளைச் செய்யவதில்லை. நாங்கள் - அவர்களை உளரீதியாக மேன்மைப்படுத்தி, சமூக மேம்பாட்டுடன் ஒன்றித்துச் செயற்பாடாற்ற வைப்பதை நோக்காகக் கொண்டே செயற்படுகிறோம்.

இவர்களுள் பெரும்பாலான பெண்களின் கணவன்மார் யுத்தத்தின்போது - ஷெல் மற்றும் துப்பாக்கிச் சூடுகளில் அகப்பட்டு இறந்தவர்களாவர். மற்றது 5 வீதமானவர்கள் - கணவன் தற்கொலை செய்துகொண்டதால், விதவைகளாக்கப்பட்டவர்கள். அதைவிட, கணவன்மார் வேறு திருமணங்களைச் செய்து கொண்டதால், கைவிடப்பட்ட பெண்கள். இப்படியான பெண்களுக்குப் பிள்ளைகளைப் பராமரிப்பதற்குப் போதிய பொருளாதார வசதிகள் இன்றி இருக்கின்றார்கள்.

அச்செழு ஒரு பின்தங்கிய கிராமம் போன்றது. இடம்பெயர்ந்த நிலையில் சொந்தக் காணியோ, இருப்பிட வசதி களோ இன்றி அல்லற்படும் மக்கள்தான்.

இருப்பிட வசதியும் இன்றி அல்லல்பட்டுக் கொண்டிருந்த மக்கள் - நாங்கள் உளநலப் பயிற்சிக்காகச் சென்றபோது, எங்களிடமிருந்து பொருளாதாரத் தேவைகளையே எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். எல்லாவகையிலும் நலிவடைந்த மக்களுக்கு, எமது பயிற்சிகள் மிகவும் உற்சாகத்தையே கொடுத்தது. இப்போ, அவர்களே குழுவாகச் செயற்படுகின்ற அளவுக்கு வந்துவிட்டார்கள்.

**சு. வாணி - ஊரெழு மேற்கு,**



ஊரெழு மேற்கில் நாங்கள் பயிற்சியளித்து வரும் பெண்களில், விதவைகளைவிடக் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள்.

இதனால், அவர்கள் தங்களுடைய பொருளாதாரத் தேவைகளை நிறைவுசெய்யக் கூலி வேலைகளுக்குச் செல்பவர்களாகவே இருக்கிறார்கள். இவர் கள் வேலையால் வந்தவுடன், நாங்கள் குறிப்பிடுகின்ற ஓரிடத்தில் கூடுவார்கள். அன்றைய கலந்துரையாடலில் - தீர்மானம் எடுத்தல், பிள்ளைகளுக்கும் தாய்மாருக்கும் இடையிலுள்ள தொடர்புகள் போன்றவற்றை அறிந்து, உளரீதியான பயிற்சிகளை வழங்குகிறோம்.

**என்னமாதிரியான பயிற்சிகளை வழங்குகிறீர்கள்?**

பயிற்சி என்று சொன்னால் - ஒரு குழுவாகப் பெண்களைச் சேர்த்து, அவர்கள் தங்களுக்குள்ள பிரச்சினைகளைச் சொல்லுவார்கள். பிறகு, அவர்கள் தங்களுக்குள் தாங்களே பிரச்சினைகளுக்கு என்னமாதிரித் தீர்வுகாணலாம் என்று கூறுவார்கள்.

**அவர்களுக்கு கூடுதலாக என்ன மாதிரியான பிரச்சினைகள் இருக்கும் ?**

நான் **Councling** செய்கிற இடத்தில் இருக்கிற பெரிய பிரச்சினை - கசிப்பு உற்பத்திதான். அங்கு 18 வயதுக்குக் குறைந்த பிள்ளைகள்தான் பெரும்பாலும் கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுகிறார்கள். கசிப்பு உற்பத்தியின்போது, பொலிஸாரால் கைதுசெய்து, சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த பெண்களும் இருக்கிறார்கள்.

பொருளாதாரப் பிரச்சினைகளைச் சீர்செய்வதற்காகவே இவர்கள் கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கிறார்கள். இதைவிட, இவர்களுக்கு வேறு தொழில் வளங்கள் கிடைப்பதில்லை. நிறையப் பெண்பிள்ளைகள் இருக்கிறார்கள். இவர்களுக்கு அங்கு பயிற்சிகளும் எதுவும் வழங்கப்படுவது இல்லை. அவர்களுக்கு ஏதாவது தொழிற்பயிற்சிகள் வழங்கும்படியும் கேட்டிருக்கிறார்கள்.

அவர்களுக்கென்ற தொழில்வாய்ப்புக்கள் இல்லாத நிலையில் - கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுவது அவர்களுக்குச் சுகமான தொழிலாக இருக்கிறது. கிராமமே ஒட்டுமொத்தமாக இந்தத் தொழிலில் ஈடுபடுகிறார்கள். கசிப்பு உற்பத்தி செய்வதைத் தடுக்க முயன்ற ஊர்ப் பொதுஅமைப்புக்கள் கூட, இவர்களின் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. இதனால், கோஷ்டி மோதல்கள்கூட நடைபெற்றிருக்கிறன.

**நீங்கள் கொடுக்கிற பயிற்சிகள் - பெண்கள் தங்களுக்குரிய பிரச்சினைகளில் இருந்து விடுபட வாய்ப்பளிக்கிறதா?**

ஆம். நிறைப் பெண்கள் தாங்கள் இப்ப மனதிலிருந்த பிரச்சினைகளை எங்களிடம் சொல்லி, அதற்கான ஆலோசனைப் பயிற்சி என்பவற்றைப் பெற்றதன்மூலம் பல பிரச்சினைகளில் இருந்து தாங்கள் வெளியேறியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்கள். கணவனின் கொடுமைகளால் அடக்கப்பட்டு, வீட்டுக்குள்ளே இருந்த பல பெண்கள் - எங்களிடம் இருந்து பெற்ற பயிற்சியின்மூலம் தலைமைத்துவத்தைத் தாமே ஏற்று நடத்துகின்ற நிலைக்கு வந்துள்ளார்கள். இது எங்களுக்கு கிடைத்த பெருவெற்றியென்றுதான் சொல்லவேண்டும். எங்களிடம் - எங்களுக்குத் தெரியாமலிருந்த ஆற்றல்கள், திறமைகளை நீங்கள் வெளிக்கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று பலர் கூறியிருக்கிறார்கள்.

**வனஜா - கோப்பாய்**

கூடுதலான பெண்கள் தாங்களே குடும்பத்திற்குத் தலைமை தாங்குகிறார் கள். கணவன் இருந்தும் அவரது உதவியில்லை என்பதால், அந்தப் பெண்களே - தங்கள் குடும்பத்திற்குத் தலைமை தாங்குகிறார்கள். பெண்களுடைய நிர்வாகத்தில் இயங்கும் குடும்பங்களைத்தான், நாம் கூடுதலாக எடுத்துப் பயிற்சியளிக்கின்றோம். கோப்பாய் வடக்கிலுள்ள விதவைப் பெண்களில் கூடுதலானவர்கள் இடம்பெயர்ந்தவர்கள். பளை, ஆனையிறவுப் பகுதிகளைச் சேர்ந்தவர்களே கூடுதலாக உள்ளனர். சில பெண்களின் கணவன்மாரின் இழப்பு வித்தியாசமானது. அதாவது, பெற்றோரின் விரும்பமின்றித் திருமணம் செய்தபடியால், அந்த ஆணைக் கடத்திச் சென்று, கொலை செய்தல் போன்ற பலவிதமான பிரச்சினைகளுக்கு உட்பட்டுள்ளார்கள்.



கூடுதலாகத் தமது வாழ்க்கைக்குப் பிள்ளைகள்தான் முக்கிய ஆதாரம் எனவும், பிள்ளைகளின் கல்வியிலே நாங்கள் கூடியகவனம் செலுத்தவேண்டும் என்பதால், நல்ல பாடசாலையிலே பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் எனவும் விரும்புவதால், எல்லா விதமான பிரச்சினைகளையும் பெண்களே எதிர்கொள்கின்றனர்.

இன்னொரு இடத்திற்கு வரும்போது - புதிய சூழலில், புதிய சமுதாயம், புதிய மக்கள், தேவையில்லாத கதைகள் இல்லையென இவ்வளவு பிரச்சினைகளையும் எதிர்கொண்டு, அவர்கள் தமது வாழ்க்கையைக் கொண்டு செல்கிறார்கள். இவ்வாறான பெண்கள் தமது கதைகளை வெளியில் சொல்லக் கஷ்டப்படுகிறார்கள்.

இப்படியானவர்கள், எங்களை நம்பிக்கதைக்கும்போது, அவர்களுக்கு ஒரு நம்பிக்கை ஏற்படுகிறது. நம்பிக்கை ஏற்படுவதால், தமது வாழ்க்கைக் கதையை மனந்திறந்து எமக்குச் சொல்லி, ஆறுதலடை கிறார்கள்.

அது அவர்களுக்கு ஒரு பெரிய ஆறுதலாக இருப்பதால், அவர்களில் பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளன. ஏனெனில் ,அவர்கள் வெளியுலகத்தோடு கதைக்க முடியாமல் அடக்கப்பட்டு இருந்தார்கள்.

இப்போது அவர்கள் வெளியில் வந்து விட்டார்கள். என்னுடைய வாழ்க்கை துன்பம். நான் இதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்னும் நிலைக்கு வந்துவிட்டார்கள்.

இவர்களை, நாங்கள் மாதத்தில் இரண்டு தரம் குழுவாகச் சேர்த்து ஆலோசனைகளை வழங்குவோம். அவ்வாறு ஆலோசனை வழங்குவதன்மூலம் ஒவ்வொருவருக்கும் ஏற்பட்ட தப்பான எண்ணங்களை - அங்கு ஒவ்வொருவரும் தமது கதைகளைச் சொல்வதால், ஒவ்வொருவரது பிரச்சினைகளையும் புரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

**நேர்காணல்**
**கலானந்தி, உஷா**

# அழப்படை ஒப்பனை
# MAKE UP

**மே**க்கப் (**Make up**) என்பது ஒரு கலையாகும். இந்தக் கலையினால், பெண்ணின் முகத்தை மாற்றி அமைத்துவிடமுடியும். அத்துடன், நம்மைப் பார்ப்பவர்கள் முதலில் நம் முகத்தைத்தான் பார்ப்பார்கள். நம் தோற்றத்தில் கவர்ச்சிகரமான அம்சம் எங்கள் முகம். அதை நாம் சிறிய சாதாரண ஒப்பனைமூலம் அழகுபடுத்திக் கொள்வதில் தவறில்லை. ஒப்பனைக் கலையில் ஒவ்வொன்றும் வித்தியாசமானவை. எல்லா ஒப்பனைகளும் ஒரேமாதிரிப் போடப்படுவதில்லை.



சாதாரண ஒப்பனை (**Normal Make up** அல்லது **daily make up**) எனவும், பசையோடு கூடிய ஒப்பனை (**Oily** அல்லது **kin make up**), மணப்பெண் ஒப்பனை (**Bridal make up**) எனவும் மூன்று வகையுண்டு. இப்படிப் பலவகைப்பட்ட ஒப்பனையை முறையாகச் செய்யாவிட்டால், முகம் சாதாரண தோற்றமளிக்கும். முக்கியமாக வர்ணங்களைப் பற்றிய நுட்ப அறிவுதான் இதில் மிகவும் அவசியமாகும். அவரவர் சரும நிறங்களுக்கேற்ற வர்ணங்களாலும், முகத்தோற்றத்திற்கேற்ற வகையிலும் ஒப்பனை போடப்பட வேண்டும்.

## சருமத்தைப்பற்றி அறிதல்

எல்லாச் சருமமும் ஒரே மாதிரி அமைவதில்லை. நாம் எப்போதும் **make up** சாதனங்களைப் போட்டுக் கொண்டால், நாம் எப்போதும் இரவில் படுக்கும்போது, நீரினால் கழுவிவிட வேண்டும். ஒப்பனைப் பொருட்களில் இரசாயனப் பொருட்கள் சேர்ந்திருப்பதால், அவை சருமத்தைப் பாதிக்கக்கூடும்.

## சருமத்தின் வகைகள்

- உலர்ந்த சருமம் அல்லது வறண்ட சருமம்.
- எண்ணெய் கசிவான சருமம்.
- பலவகை அமைப்புடைய சருமம்.
- சாதாரண சருமம்.

ஒவ்வொருவருக்கும் எப்படிப்பட்ட சருமம் என்பதை நாம் இனங்கண்டு, அதற்கேற்ப ஒப்பனைச் சாதனங்களை உபயோகிக்கவேண்டும்.



## உலர்ந்த சருமம் அல்லது வறண்ட சருமம்

உலர்ந்த சருமமாகத் தோற்றமளிப்பதற்குக் காரணம் - ஈரப்பசையை வைத்திருப்பதற்கு இயலாமையாகும். குளிர்காலங்களில் இவ்வகையான சருமம் காணப்படும். இதன் அறிகுறிகள் தோல் உரிதல், பேப்பர் போன்ற மென்மையான சருமமாக இருத்தல், இளவயதில் கோடுகளும் சுருக்கங்களும் காணப்படுதல் இதனை தடுக்க **Gold Gream** பாவிக்கலாம்.

## எண்ணெய்க் கசிவான சருமம்

இவ்வகைச் சருமத்திற்குப் பளபளப்பும், எண்ணெயக் கசிவும் அதிகமாக இருக்கும். இவ்வகையான முகத்திற்கு, உரியமுறையில் ஒப்பனைச் சாதனம் உபயோகிக்காவிடின், முகத்தை அழகுபடுத்தமுடியாது.

## பலவகை அமைப்புடைய சருமம்

இது ஒழுக்கத்திற்கு மாறான சருமமாகும். முக்கியமாக முகத்தில், மூக்கில் மேலும் நாடியிலும் எண்ணெய்க் கசிவு இருக்கும். மற்றைய பகுதிகள் சாதாரணமுகமாக இருக்கும். இவ்வகைச் சருமத்திற்கு **Make up** போடுவது கஷ்டமாக இருக்கும்.

## சாதாரண சருமம்

எல்லோருக்கும் சாதாரணமாக இவ்வகைச் சருமமே இருக்கும். காலநிலை மாற்றத்தினாலும், இடமாற்றத்தினாலும் சருமத்தில் மாற்றம் ஏற்படும். இந்தச் சருமத்திற்கு ஒப்பனைச் சாதனங்களை உரியமுறையில் உபயோகிக்கும்போது, துள்ளியமான அழகைக் கொடுக்கும். அத்துடன், ஒப்பனைச் சாதனம் கவர்ச்சிகரமானதாகப் படியும்.
அத்துடன், பார்ப்பதற்கு நல்ல **Smooth** ஆகவும் இருக்கும்.

# குறிப்புகள்

★ எலுமிச்சம்பழத்தை நம் உணவில் தினசரி சிறிய அளவிலாவது சேர்த்துக்கொண்டால், இரத்தத்தைத் தூய்மைப்படுத்தி ஞாபகசக்தியை வளர்க்கும். உடல் சுறுசுறுப்பை உண்டாக்கும்.

★ தேநீர் தயாரிக்கும்போது, துளசி இலைகளைக் கொதிக்கும் நீருக்குள் போட்டால், தேநீர் மணமாக இருக்கும். அதே சமயம் உடலுக்கும் சிறந்தது.

★ தோசைக்கு அரைக்கும்போது, உழுந்துடன் சிறிது வெங்காயம் ஊறப்போட்டு அரைக்கவும். மெதுவாகவும், மணமாகவும் இருக்கும்.

★ அகத்திக் கீரையைச் சமையலில் பயன்படுத்தி உணவில் சேர்த்து உண்டு வந்தால், உடல் சூடு தணியும்.

★ போத்தலிருந்து ஊறுகாய் எடுப்பதற்கு சில்வர் கரண்டியைப் பயன்படுத்துவதைத் தவிர்த்து, மரத்தினாலான கரண்டியைப் பயன்படுத்துவதால் ஊறுகாய் கெடாது இருக்கும்.

# வேண்டாத கர்ப்பத்தைத் தடுப்பதற்கு

## கட்டுப்பாட்டு முறைகளைப் பயன்படுத்தலாம்

**கர்ப்பம் தரிப்பது என்பது - ஒரு பெண்ணுக்குரிய சந்தோஷமான நிகழ்வு. பூப்பெய்துவது முதல் வாழ்க்கையின் முடிவுவரை பல இயற்கை உபாதைகளை எதிர்நோக்கவேண்டியவளாக இருக்கிறாள் பெண். இந்தநிலையில், தேவையற்ற கர்ப்பங்களைத் தடுக்கவும், கர்பந்தரித்தலைத் தள்ளிப்போடவும் விரும்பும் பெண்ணுக்கு விளக்கமளிக்கிறார்கள் - பெண்நோயியல் துறை நிபுணர் களான - Dr. G. பவானி, Dr.A.கெனத் ஆகியோர்.**

**நா**ன் 24 வயதுடைய, உயர்கல்வி கற்கும் மாணவி. சமீபத்தில் எனக்குத் திருமணமாகியது. தற்போது நான் கர்ப்பம் தரிப்பேனாகில், அது எனது உயர்கல்வியைப் பாதிக்கும் என அஞ்சுகின்றேன். எனவே, தற்போதைய நிலையில் நான் கர்ப்பம் தரிப்பதைத் தள்ளிப் போடுவதற்கு யாது செய்யலாம் என்பதை விளக்குவீர்களா?

பெண்ணொருவர் - தான் கர்ப்பமாவதைத் தவிர்ப்பதற்கு குடும்பக்கட்டுப்பாட்டு முறைகளைப் பயன்படுத்த முடியும். இதில் இரண்டு வகையுண்டு.

1. தற்காலிக முறைகள் (**Temporary method**)

2. நிரந்தர கருத்தடை முறை (**Permanant method**). இம்முறை தமது குடும்பத்தைப் பூரணப்படுத்திய, குழந்தைகளைப் பெற்ற பெண்களுக்கு உகந்தது.

**(i)** தற்காலிக முறைகள் எனப்படுபவை.

கருத்தரிப்பதைத் தள்ளிப்போடவும், தமக்கு வேண்டியபோது, குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளவும், விரும்பும் இளம் தம்பதியினர் இம்முறைகளில் ஒன்றையோ அல்லது சிலவற்றையோ பின்பற்றுவதன் மூலம், சிறந்த பலனைப் பெறமுடியும்.

பெண்கள் தமது வசதி வாய்ப்புக்களையும் பொறுத்தோ அல்லது தமது தேக ஆரோக்கிய நிலைமை, நோய் நிலைமைகளைப் பொறுத்தும், தமக்கேற்ற குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளைப் பின்பற்றமுடியும்.

**தற்காலிக முறைகளைப் பின்வருமாறு வகைப்படுத்த முடியும்**

1. கருத்தடை மாத்திரை, கருத்தடை ஊசி மற்றும் தோலினுட் பதிக்கும் வில்லைகள்.

2. லூப் (**intra uterine Contraceptive Device**)

3. உறைகள், மூடிகள். (**Barrier method**)

4. இயற்கைக் குடும்பக்கட்டுப்பாட்டு முறைகள் (**natural**)

**(ii)** கருத்தடை மாத்திரைகள் / ஊசி எனப்படுபவை யாவை?

இவை மாதவிடாச் சக்கரத்தை ஒழுங்குபடுத்தும் ஓமோன்களான ஈஸ்ரோஜன், புரோஜஸ்டரோன் ஓமோன்களை சேர்த்தோ அல்லது புரோஜஸ்ட்ரோன்னை மட்டும் கொண்ட வில்லையாகவோ அல்லது ஊசி மருந்தாகவோ அல்லது தோலினுட் பதிக்கும் வில்லையாகவோ பயன்படுத்த முடியும். இவை சூலிடலைத் தடுப்பதன் மூலமும் கரு உட்பதிக்கப்படும் கருப்பையின் சூழலை மாற்றுவதன்மூலம் கருத்தரித்தலைத் தடுக்கின்றன.

**கருத்தடை மாத்திரைகள்**

இது எமது பிரதேசத்தில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் கட்டுப்பாட்டு முறையாகும்.

**பாவிக்கும் முறை**

மாதவிடாய் ஆரம்பித்து 5 நாட்களினுள் இவற்றை உள்ளெடுக்கவேண்டும்.

தினமும் தவறாது உட்கொள்ள வேண்டும்.

குறிப்பாக இரவில் உட்கொள்வது, பக்கவிளைவுகளாக வயிற்றுப்பிரட்டு, ஓங்காளம் போன்றவற்றைத் தவிர்க்க உதவும்.

**அனுகூலங்கள்**

இது மிகவும் பாதுகாப்பானது.

இலகுவில் கிடைக்கக்கூடியது.

பாவிப்பது சுலபம்.

கர்ப்பப்பைபுற்று, சூலகப் புற்றுநோய் போன்றவற்றிலிருந்து பாதுகாப்பளிக்கின்றது.

குருதியிழப்பைக் குறைப்பதன் மூலம் குருதிச்சோகையைத் தடுக்கிறது.

**கவனிக்கப்பட வேண்டியவை**

இருதய நோயாளிகள் அல்லது நாளங்களில் குருதி உறையும் நிலைமையைக் கொண்டவர்கள் கருத்தடை மாத்திரைகளைத் தவிர்ப்பது நல்லது.

உதாரணம் :- **- Microgynon**
**- Eugynon**

இவற்றைக் குடும்பநல உத்தியோகத்தர்கள், மருந்தகங்கள் மற்றும் வைத்தியசாலைகளிலும் பெற்றுக்கொள்ளமுடியும்.

**கருத்தடை ஊசிகள**

இவை **Proges toron** ஓமோனைக் கொணடவை. கருத்தடை மாத்திரை போன்றே பாதுகாப்பானவை.

**பாவிக்கும் முறை**

மாதவிடாய் ஆரம்பித்து 5 நாட்களினுள் போடவேண்டும். 90 நாட்களிற்கு ஒருதடவை ஒழுங்காகப் போடவேண்டும்.

**கவனிக்கப்பட வேண்டியவை -**

உயர் குருதி அமுக்கம், சலரோகம் மற்றும் மார்பகக் கட்டி உள்ளவர்கள் இவற்றைத் தவிர்க்கவேண்டும்.

இதை உபயோகிக்கும்போது, மாதவிடாய் ஏற்படுவது நின்றுவிடும் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

**தோலினுட் பதிக்கும் வில்லைகள்**
**(Implant)**

இவையும் ஓமோன் வில்லைகளே. இவை கையின் தோலின் கீழ் பதிக்கப்படுகின்றன. 5 வருடங்கள்வரை செயற்திறன் உடையவை.

இவை எமது பிரதேசத்தில் பயன்படுத்துவதில்லை.

**லூப் (IUCD) என்றால் என்ன?**

பிளாஸ்ரிக் மற்றும் செப்பு உலோகத்தினாலான பொதுவான 'T' வடிவமுடைய இந்த லூப்பானது, கருப்பையினுள் பாதுகாப்பான முறையில் உட்செலுத்தப்படுவதன்மூலம். கருத்தரித்தலைத் தவிர்க்கமுடிகின்றது.

இவை கருப்பையின் சுருக்கத்தையும், அசைவையும் அதிகரிப்பதன்மூலமும் கருத்தரித்தலைக் தடுக்கின்றன என நம்பப்படுகின்றது.

இவையும் எமது பிரதேசத்தில் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்ற குடும்பக்கட்டுப்பாட்டு முறையாகும்.

**கவனிக்கப்பட வேண்டியவை**

⊠ முன் அனுபவமுள்ள ஒருவரால் கிருமித்தொற்று இல்லாத சூழலில் இது செலுத்தப்படவேண்டும்.

⊠ 5 வருடம்முதல், 7 வருடம்வரை செயற்திறன் உடையவை.

⊠ மாதவிடாய் ஆரம்பித்து 5 நாட்களினுள் அல்லது குழந்தை பெற்றுக்கொண்ட 6 வாரங்களினுள் இவை உட்செலுத்தப்பட வேண்டும்.

⊠ மாதவிடாய்க் காலத்தின் பின்னும், லூப்பினுடைய நூல் உள்ளதா என்பதை விரல்களால் தொட்டு அவதானிக்க வேண்டும்.

⊠ உட்செலுத்திய 2-3 மாதங்களுக்குச் சற்று அதிகமான குருதிப்போக்கு ஏற்பட வாய்ப்புண்டு.

⊠ கடுமையான வயிற்று நோ அல்லது லூப்பின் நூல் தெரியாதவிடத்து உடன் வைத்தியரை நாடவேண்டும்.

**ஏற்படும் பிரச்சினைகள்**

இவை கருப்பையினுள் கருத்தரித்தலை மட்டுமே தடுக்கின்றன. கருப்பையின் வெளியே கருத்தங்குதலைத் தவிர்க்கமுடியாது.

(உதாரணம் - பலோப்பியன் குழாயினுள் கருத்தங்குதல்)

இவை கருப்பைச் சுவரை உட்துளைத்துச் செல்கின்றன. தற்போது பயன்படுத்தப்படும் லூப் பாதுகாப்பானது.

**Bamier method** - **குடும்பக் கட்டுப்பாடு எனப்படுபவை.**

**1. இரசாயனப் பதார்த்தங்கள்**

இதன்போது, விந்தணுக்களை அழிக்கும் திறன் வாய்ந்த இரசாயனப் பதார்த்தங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இவை உறவின் முன்னதாக யோனியினுள் செலுத்தப்படவேண்டும். இவை வில்லைகள், களிம்புகள் (**cream**), **Foam** (நுரை) போன்ற வடிவங்களில் கிடைக்கின்றன.

**2. ஆணுறைகள்** (**Condoms**)

இவை இன்றுவரை பொதுவாகப் பயன்படுத்தப்படும் குடும்பக் கட்டுப்பாட்டு முறையாகும். முறையாகப் பயன்படுத்தின் 100 வீதம் பாதுகாப்பானது. இதன்போது, விந்தானது ஆணுறையினுள் சேகரிக்கப்படுதலால் கருக்கட்டல் தவிர்க்கப்படுகிறது.

**இதன் அனுகூலங்கள்**

⊠ இலகுவானது - செலவு குறைந்தது.

⊠ இலகுவில் கிடைக்கக்கூடியது.

⊠ மருத்துவரின் ஆலோசனை அவசியமில்லை.

⊠ பாலுறவு நோய்கள், **HIV** போன்றவற்றிலிருந்து பாதுகாப்பளிக்கின்றது.

**கவனிக்க வேண்டியது**

ஒரு ஆணுறையை ஒரு தடவை மட்டுமே பயன்படுத்தல்வேண்டும்.

**பெண்ணுறைகள் (Female Condoms / cap)**

ஆணுறைகளைப் போன்று, பெண்ணுறைகளும் தற்போது பயன்பாட்டிலுள்ளன.

**இயற்கையான குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளாவன.**

**(Natural Family planning)**

இதன்போது எந்தவொரு பிறபொருட்களையும் பயன்படுத்தாமல் கருத்தரித்தல் தவிர்க்கப்படுகிறது.

**கலண்டர் முறை**

**(Safe period / Rhythm Method)** மற்றும் உடல் வெப்பநிலை மாற்றங்களைக் கணிப்பிடுவதன் மூலம், கருப்பைக் கழுத்தின் சுரப்புகளின் பிசுபிசுப்புத் தன்மையைக் கொண்டும், சூலிடல் நாளை அண்ணளவாகக் கணித்து, அக்காலத்தில் உறவைத் தவிர்ப்பதன்மூலம் கர்ப்பத்தைத் தவிர்த்துக் கொள்ளமுடியும்.

ஆனால், இம்முறைகள் பாதுகாப்பானவை அல்ல, கருத்தரிக்கும் சந்தர்ப்பங்கள் அதிகம் என்பதை மனதிற் கொள்ள வேண்டும்.

**அவசர நிலைமையில் குடும்பக் கட்டுப்பாட்டு முறை**

பெண்ணொருவர் பாதுகாப்பற்ற முறையில் உறவு கொண்டிருப்பின் 5 தினங்களுக்குள் முறையான வைத்தியரை அணுகுவதன் மூலம் வேண்டாத கர்ப்பத்தைத் தவிர்க்க முடியும்.

எனவே, மேற்கூறிய பொதுவான குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளை மனத்திற் கொண்டு உங்கள் உடல்நிலைக்கேற்ப கருத்தடை முறையைத் தெரிவுசெய்யலாம் அல்லது மருத்துவரின் ஆலோசனையைப் பெறலாம்.

**பெண்நோயியல் சம்பந்தமான பிரச்சினைகள், சந்தேகங்களைக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைத்தால், அதற்கான மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்படும்.**

சிநேகிதியே
"நமது ஈழநாடு"
**267, நாவலர் வீதி.**
**யாழ்ப்பாணம்.**

# போளி



**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| கோதுமை மா | - 500 g |
| கடலைப்பருப்பு | - 100 g |
| சீனி | - 100 g |
| கேசரிப்பவுடர் | - சிறிதளவு |
| ஏலப்பொடி | - அளவாக |
| தேங்காய்ப் பூ | - 5 மேசைக்கரண்டி |
| நெய் | - 1/4 போத்தல் |

## செய்முறை

முதலில் கோதுமை மாவை அரித்தெடுத்கவும். பின் அதனுள் சிறிதளவு உப்புச் சேர்க்கவும். பின்னர் கேசரிப்பவுடரை எடுத்து, அதனுள் தண்ணீரும் சேர்த்துக் கலக்கியபின் மாவினுள் விட்டுக் குழைக்கவும். பின் **Board** இல் போட்டு உருட்டி எடுத்து மெல்லியதாக வந்ததும் வட்டமாக வெட்டவும். பின்னர், கடலைப் பருப்பை அவித்து எடுத்து, அதனுள் தேங்காய்ப் பூவும், சீனியும், ஏலப்பவுடரையும் சேர்த்துப் பின் வட்டமாக வெட்டியதன் மேற்பரப்பில், பின் இன்னொரு வட்டத்தினை வெட்டி எடுத்து அதனால் மூடி ஒட்டியபின், எண்ணெயைக் கொதிக்க வைத்து நன்றாகக் கொதித்ததும், பொரித்தெடுத்துப் பின் பரிமாறலாம். இதனைக் காலை உணவாகவும் உட்கொள்ளலாம்.

# Baby Rose

## தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| பப்ளின் துணி | - **Pink, Green** |
| நூல் | - சிறிய குண்டு |
| மெழுகுதிரி | |
| கட்டுக்கம்பி | |

## செய்முறை

**Baby Rose** செய்வதாயின், பப்ளின் துணிக்குக் கஞ்சியிடவும். அதன் பின் சிறிய இதழ் **Cutting** ஐ வைத்து, இரண்டு. இதழ்களும் பெரிய **Cutting** வைத்து இரண்டு இதழ்களை வெட்டி எடுத்த பின், நடுப்பகுதியில் சிறிய வட்டமாக வெட்டி எடுக்கவும். அதன்பின் இதழ்களின் நரம்புப்பகுதியை அளவாக வெட்டிவிடவும். சிறிய நூளினால் ஒவ்வொரு இதழின் நுனியிலும் நூள் பண்ணவும். நூள் பண்ணும்போது, சிறிய இதழ்களை நூள் பண்ணிய பக்கமே நடுவிலும் நூள்பண்ணவும். பின்னர், பெரிய இதழ்களை மறுபக்கமாக திருப்பி, நடுப்பகுதியில் நூள் பண்ணவும். கட்டுக்கம்பியின் நுனியை மடித்து, பஞ்சு ஒட்டியபின், முதலில் சிறிய இதழ்கள் இரண்டையும், பின் பெரிய இதழ்களையும் ஒவ்வொன்றாக ஒட்டிய பின்னர் புல்லியை **Green** கலர் துணியில் வெட்டி ஒட்டவும். கம்பிக்கு **Flower Tape** சுற்றவும். மொட்டுச் செய்வதாயின்- சிறிய இதழ்கள் இரண்டை வெட்டி எடுத்து, மேற்கூறியவாறு புல்லியை வைத்து ஒட்டவும். இவை செய்வதற்கு **Green** துணியில் **Cutting** வைத்து வெட்டி, **Flower Tape** சுற்றிய கம்பியில் இலையைச் சமச்சீராக ஒட்டிபின், கைக்குட்டையில் நூள் பண்ணவும். இவ்வாறு செய்யப்பட்ட மொட்டு, பூ, இலை ஆகியவற்றை **Heart** வடிவில் கம்பியை வளைத்து, அதற்கு முழுவதும் **Flower Tape** சுற்றிய பின், ஓர் ஒழுங்கான முறையில் அதனைச் செய்து, இவற்றைச் சுவரில் - சுவர் அலங்காரமாகத் தொங்கவிடலாம்.



நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்து*
*உள்வேப்பர் ஒள்ளி யவர்*

*- திருக்குறள்.*

# நமது நோக்கு

## உறங்கும் பகை!

குடாநாட்டில் போர்க்காலத்தில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் மற்றும் வெடிபொருட்களைக் கண்டுபிடித்து, அகற்றும் நடவடிக்கைகள் சர்வதேச நிறுவனங்களின் ஆதரவுடன் தொடரப்படுகின்ற அதேவேளை -

அகற்றப்படாதுள்ள பல்லாயிரக்கணக்கான வெடிபொருட்களால், பொதுமக்கள் பாதிக்கப்படுகின்ற சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெற்றுவருகின்றன.

மட்டுவில் பகுதியில் - தோட்ட வேலையில் ஈடுபட்டிருந்த இரண்டு பேர், வெடிபொருள் ஒன்று வெடித்துப் படுகாயமடைந்திருக்கின்றனர். சுன்னாகத்தில் இன்னொருவர் காயமடைந்துள்ளார். இத்தகைய அவலம்மிக்க சம்பவங்கள் குடாநாட்டில் இடம்பெறுவது தொடர்கதையாகிவிட்டது.

வருடாந்தம், கணிசமான தொகையினர் கண்ணிவெடிகளில் சிக்கிக் காயமடைகின்றனர். குறிப்பாக தமது கால்களை இழந்து வருகின்றனர். இத்தகைய சம்பவங்கள் இந்த வருடத்தில் குறைவடைந்திருந்தும், கடந்த காலத்தில் இத்தொகை மிக அதிகமாகவே இருந்துவந்தது.

கண்ணிவெடிகளில் சிக்கிக் கால்களை இழந்தவர்களிலும்- அவர்களின் குடும்பத்தவர்களது எதிர்காலம் என்பது பெரிதும் கேள்விக்குறியாகியிருக்கிறது.

செயற்கை அவயவங்களினூடாக அவர்களின் வாழ்க்கையை மறுசீரமைக்க முயற்சிக்கப்பட்டாலும், அவர்களின் இயல்பானதும், யதார்த்தபூர்வமானதுமான வாழ்க்கை என்பது - சிக்கலுக்குரியதாகவே காணப்படுகின்றது.

இத்தகைய பாதிப்புக்குள்ளானவர்கள், உடல் ரீதியாக செயற்கை அவயவங்களைப் பொருத்திக் கொண்டாலும், உளரீதியாக அவர்கள் அடைந்த பாதிப்புக்களை இலகுவில் மாற்றிக்கொள்ள முடிவதாகவில்லை.

தனிநபர் ஒருவரின் பாதிப்பு என்பது, அவர் சார்ந்த குடும்பத்தினரது பாதிப்பாக மாற்றம்பெறும்போது அதன் தாக்கம் இனனும் அதிகரிக்கின்றது. ஒட்டுமொத்தக் குடும்பத்தினையுமே அதன் பாதிப்பு தாக்கத்திற்குட்படுத்துகின்றது.

ஒரு கண்ணிவெடியின் பாதிப்பு ஒரு தனிமனிதனின் பாதிப்பாக இருந்து, அவன்சார்ந்த குடும்பத்தின் பாதிப்பாக மாறி - பின்னர் ஒரு சமூகத்தின் பாதிப் பாகத் தோற்றம் பெற்றுவிடுகின்றது.

இதுவே ஒரு கணிசமான மக்களின் வாழ்க்கைப் பிரச்சினையாகவும் மாறிவருகின்றது என்றால் மிகையில்லை. இந்த நிலை இன்று ஆயிரக்கணக்கான தமிழ்மக்களின் முக்கிய பிரச்சினையாகவுள்ளது.

இதற்கெல்லாம் காரணம் - இந்தக் கண்ணிவெடிகள், மிதிவெடிகள்தான் என்பதில் எந்தச் சந்தேகமும் கிடையாது. இராணுவ நடவடிக்கைகளின் பெயரால் நிகழ்த்தப்படும் படுபயங்கரமானதும் - நீண்டகால அழிவுதரும் போர் ஆயுதப் பிரயோகமாகவும் இது அமைந்துவிடுகின்றது.

ஒரு மிதிவெடி ஐம்பது வருடங்கள் வரை உறங்கு நிலையில் இருந்து, பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதென்றால் - அதைப்போல் வேறெந்தக் கொடுமையும் இருக்கப்போவதில்லை.

இத்தகைய அழிவு நிறைந்ததும், ஆபத்துமிக்கதுமான - ஆயிரக்கணக்கானவையல்ல - இலட்சக்கணக்கான மிதிவெடிகள், வடக்கு - கிழக்கில் புதைக்கப்பட்டிருக்கின்றன.

மில்லியன் கணக்கிலான இந்த மிதிவெடிகளை அகற்றுவதில், உள்நாட்டு வெளிநாட்டு கண்ணிவெடி அகற்றும் குழுக்கள் தீவிர கவனம் செலுத்தி வரு கின்றன. இத்தகைய முயற்சிகளில், நிறையவே புதிய நவீன தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட போதும் -

கண்ணிவெடிகளை அகற்றுகின்ற வேகம் போதுமானவையாக இல்லையென்றே சொல்லலாம். வெளிநாட்டு கண்ணிவெடியகற்றும் நிபுணர்களின் பணிவேகம் குறைவாக இருக்கும் அதேவேளை -

பாரம்பரிய முறைகளில் கண்ணிகளை அகற்றும் உள்ளூர் தொண்டர்களின் சேவை உயர்ந்த பெறுபேற்றைத் தந்திருக்கின்றது. ஆனாலும், தமது மக்களின் அன்றாட வாழ்க்கையை அச்சுறுத்தலில் இருந்து மட்கமுடியாததொரு நிலையே காணப்படுகிறது.

இந்த அச்சுறுத்தலிலிருந்து மீட்கக்கூடிய தொரு சூழலில்தான், முழுமையான இயல்பு வாழ்க்கையைக் கட்டியெழுப்பமுடியும்.

# கல்வியியற்கல்லூரிக்கு விண்ணப்பிக்கும் மாணவருக்கான வழிகாட்டு முறைகள்!

## கலாநிதி தி.கமலநாதன் அறிவிப்பு

தேசிய கல்வியியற் கல்லூரிக்கு - மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்வது தொடர்பாக, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

இந்த அறிக்கையின் முழுவிபரம் வருமாறு -

2004 ஆம் ஆண்டுக்கான - தேசிய கல்வியியற் கல்லூரிகளில் ஆசிரிய பயிலுனர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 01.08.2003 வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியில், இதற்கான விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்தினம் 01.09.2003 ஆகும்.

கடந்த காலங்களில் - மாணவர்கள் தமது விண்ணப்பங்களை அனுப்பும்போது, விடுகின்ற சிறிய சிறிய தவறுகளால், தமது அனுமதிச் சந்தர்ப்பங்களைத் தவறவிட்டுள்ளனர். விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தியாக்கும்போது, அதில் அதிகூடிய கவனமெடுத்தல் வேண்டும். மற்றவர்களைக் கேட்டோ அல்லது விளம்பரத்தினை அரைகுறையாகப் படித்தோ அல்லது வேறொருவரைக் கொண்டோ விண்ணப்பப்படிவங்களை பூர்த்தியாக்குதல் கூடாது.

முதலில் வர்த்தமானி அறிவுறுத்தல்களைக் கவனமாகப் படித்து, தெளிவாக விளங்கிக் கொள்ளல்வேண்டும். விளக்கம் குறைவாக இருக்குமானால், அது தொடர்பான தெளிவுள்ளவரை நாடி விளக்கத்தைப் பெறவேண்டும் அல்லது கல்வியற் கல்லூரியொன்றுடன் தொடர்புகொண்டு சரியான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

விண்ணப்பப்படிவத்தை நன்றாகப் படித்து, அங்கு என்ன தகவல்கள் கேட்டுள்ளார்கள் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

வர்த்தமானி விளம்பரத்தைப் படித்து, அதில் எந்தத் துறைக்கு தான் பொருத்தமானவர் என்பதை முடிவு செய்து கொள்ளவேண்டும். ஒருவர் மூன்று துறைகளைத் தெரிவுசெய்து கொள்ளமுடியும். விண்ணப்பப்படிவத்தின் போட்டோபிரதியொன்றில் முதலில் பென்சிலால் நிரப்பத் தொடங்குதல் வேண்டும்.

பெயர், சுட்டிலக்கம் போன்றவற்றை - க.பொ.த (உ/த), க.பொ.த. (சா/த) சான்றிதழ்களில் உள்ளது போன்று, எவ்வித மாற்றமுமின்றி எழுதுதல்வேண்டும்.

கடந்த காலங்களில் மாணவர்கள் இவற்றை எழுதும்போது விட்ட தவறுகளால் நேர்முகப் பரீட்சைப் பட்டியலில் அவர்களின் பெயர்கள் இல்லாதுபோயுள்ளது. நேர்முகப்பரீட்சைப் பட்டியல்கள், விண்ணப்பப்படிவம், அதிலுள்ள பெயர், சுட்டிலக்கம் என்பவற்றை - பரீட்சைத் திணைக்களத்திலுள்ள பெறுபேறுகளுடன் ஒப்புநோக்கி கணினி மூலம் தயாரிக்கப்படுவதால், அவற்றில் தவறுகள்விடும்போது, கணினி தவறுவிட்ட விண்ணப்பங்களை நிராகரித்துவிடும். எனவே, விண்ணப்பதாரிகள் மேற்சொன்ன விடயங்களில் விடுகின்ற சிறிய தவறும், பாதிப்பினைத தரும் என்பதை நன்றாக உள்வாங்கிச் செயற்படவேண்டும்.

உதாரணமாக - பெயர், எழுதும்போது பெயரில் ஏதாவது எழுத்தைத் தவறவிடுதல் அல்லது மாற்றி எழுதுதல், சுட்டிலக்கத்தில் சில எண்களைத் தவறவிடுதல், அல்லது மாற்றி எழுதுதல் போன்ற தவறுகள் காரணமாக, கடந்த காலங்களில் கணினியால் நிராகரிக்கப்பட்டு பல விண்ணப்பதாரிகள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். எனவே, இவ்விடயத்தில் விண்ணப்பதாரிகளின் கூடிய கவனம் தேவை. இது போன்று விண்ணப்பதாரியின் பிறந்த திகதி, முகவரி ஆகியனவும் சரியான முறையில் எழுதப்படவேண்டும்.

முடிவாக, விண்ணப்பம் நிரப்பி முடிந்ததும் திரும்ப மிகக் கவனமாக சரிபார்க்கப்படவேண்டும். விண்ணப்பத்தில் எல்லாக் கூடுகளும் நிரப்பப்பட்டுள்ளனவா என்று உறுதி செய்யப்படவேண்டும். பொருத்தமில்லாத கூடுகளில் பொருத்தமில்லை என்று எழுதப்படவேண்டும். குறிப்பிட்ட முடிவு திகதிக்குமுன் விண்ணப்பம் கிடைக்கக்கூடியதாக, பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். இறுதிநாள்வரை காத்திராமல் நேரகாலத்துடன் விண்ணப்பங்கள் அனுப்பப்படுவதுடன், பதிவுசெய்த பற்றுச்சீட்டை பத்திரப்படுத்தி வைத்திருத்தல்வேண்டும்.

இது தவிர, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் - இவ்வாண்டு விசேட கல்விக்கான பாடத்துறையில் மாணவர்கள் பயிற்சி பெறவுள்ளனர். இக்கல்வித் துறையானது, இன்றைய எமது சூழலில் மிகவும் அவசியமானதொன்றாகும். இத்துறை, இவ்வாண்டு எமது கல்லூரியில் ஆரம்பமாவது மகிழ்ச்சிக்குரியதே எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இயக்கச்சிப் பகுதியில் நடமாடும் வைத்திய சேவை!

## ஆயுர்வேத வைத்தியர்கள் நடத்துகின்றனர்

பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்தியர்கள் - இயக்கச்சிப் பகுதியில் நடமாடும் வைத்திய சேவையை நடாத்தி வருகின்றனர்.

எவ்வித வைத்திய வசதிகளுமற்ற இயக்கச்சி, கோயில் வயல், சங்கத்தார்வயல் போன்ற பகுதிகளிலுள்ள மக்கள், இச்சேவையினால் வைத்திய வசதிகளைப் பெற்றுள்ளனர்.

பிரதி வியாழக்கிழமை தோறும் இந்த நடமாடும் சேவை நடாத்தப்பட்டு வருகின்றது. 122.

# வடமராட்சியில் 12 பாடசாலைகளுக்கு யுனிசெப் குடிநீர், சுகாதார வசதிகள்!

## இருபது லட்சம் ரூபா ஒதுக்கீடு

வடமராட்சியில் யுனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் 12 பாடசாலைகளுக்குக் குடிநீர், சுகாதார வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன. இதற்கென யுனிசெப் நிறுவனத்தினர் சுமார் 20 இலட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளனர்.

இவ்விடயம் சம்பந்தமான கூட்டம் அண்மையில் வடமராட்சி கல்விப்பணிமனையில், வலயக்கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் யுனிசெப் நிறுவன அதிகாரிகளும், பாடசாலை அதிபர்கள் அபிவிருத்திச் சங்கத்தினரும் கலந்துகொண்டனர்.

இத்திட்டத்தின் கீழ் வடமராட்சிக் கல்வி வலயத்தில் துனனாலை தெற்கு அ.த.க.பாடசாலை, குடத்தனை கரையூர் றோ.க.த.க. பாடசாலை, கெருடாவில் இ.த.க. பாடசாலை, கரணவாய் மணியகாரன் அ.த.க.பாடசாலை, மேலைப்புலோலி சைவப்பிரகாசம் வித்தியாசாலை, கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம், துன்னாலை காசிநாதர் வித்தியாலயம், கரணவாய் வேதாரணியம் வித்தியாலயம், உடுப்பிட்டி சைவப்பிரகாசம் வித்தியாலயம், அல்வாய் வடக்கு இ.த.க.பாடசாலை, கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலை ஆகியவற்றிற்கே சுகாதார வசதிகளும், குடிநீர் வசதிகளும் ஏற்படுத்திக்கொடுக்கப்படவுள்ளன. (122)

# வடமராட்சி கிழக்குப் பகுதிக்கான வைத்திய சேவை மீண்டும் ஆரம்பம்

கடந்த மே மாதம் தொடக்கம் நிறுத்தப்பட்டிருந்த வடமராட்சி கிழக்குப் பகுதி மக்களுக்கான வைத்திய சேவை மீண்டும், கடந்த மாதம் 23 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

வாரத்தில் செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் இருந்து வருகை தரும் வைத்தியர் ஒருவரும், சில ஊழியர்களுமே இப்பணியை மேற்கொண்டு வந்தனர். இச்சேவையில் தாய் - சேய் கிளினிக்கும் நடைபெற்று வந்தது. இச்சேவைகள் கடந்த மே மாதம் நிறுத்தப்பட்டதால், இப்பிரதேச மக்கள் பெரும் கஷ்டத்திற்குள்ளாகியிருந்தனர். இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறையிடப்பட்டதை அடுத்தே மீண்டும் இச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையின் கட்டடப்பணிகளில் பெரும் பகுதி பூர்த்தியடைந்துள்ளமையால், மிகவிரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது. இது இப்பிரதேச மக்களுக்கு நன்மையளிக்கும் விடயமாகும்.

# வனவள செயலகம் வவுனியாவில் திறப்பு

தமிழீழ வனவளப் பாதுகாப்புப் பிரிவினர் - தமது மாவட்டச் செயலகத்தினை வவுனியாவில் அண்மையில் திறந்துள்ளனர்.

வனவளப் பாதுகாப்புப் பிரிவின்- வவுனியா வடக்கு முன்னாள் கோட்டக் கல்வி அதிகாரி மங்கள விளக்கினை ஏற்றினார்.

தேசியக் கொடியினை வவுனியா வடக்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் திலீப் ஏற்றினார். மாவட்ட செயலக பெயர்ப் பலகையினை வவுனியா வடக்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர் இந்திராசு திரைநீக்கம் செய்து வைத்தார். செயலக மண்டபத்தினை வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் திருஞானசம்பந்தமூர்த்தி நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். (122)

# நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய் மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.85 | 97.31 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 155.61 | 157.50 |
| 1 யூரோ | 109.81 | 110.97 |
| 1 சுவிஸ் பிராங் | 70.61 | 71.81 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 62.73 | 63.74 |
| 1 ஜப்பானிய யென் | 0.80 | 0.81 |
| 1 சவூதி றியால் | 25.00 | 25.89 |

# கம்பவாரிதி ஜெயராஜுக்கு தமிழகத்தில் விருதுகள்

ஈழத்தமிழ் உலகின் சிறந்த பேச்சாளரும், அகில இலங்கை கம்பன் கழக ஸ்தாபகருமான 'கம்பவாரிதி' இ.ஜெயராஜீற்கு தமிழகத்தில் இரண்டு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. சென்னை கம்பன் கழகத்தினரால் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்ற 'கம்பகலாநிதி' இரா.இராதாகிருஷ்ணன் நினைவு விருதையும், பேராசிரியர் அறவாணன் அறக்கட்டளை ஆண்டுதோறும் வழங்கிவருகின்ற 'சர்வதேசரீதியான அறவாணர் சாதனை விருதி"னையும் பெற்றுக்கொண்டுள்ள கம்பவாரிதி - ஈழத்தமிழ் இலக்கிய உலகத்துக்குப் பெருமை தேடித்தந்துள்ளார்.

சென்னை, இராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் நடைபெற்றுவரும் இவ்வாண்டுக்கான கம்பன் விழாவின் முதல்நாளன்று - "கம்பகலாநிதி இரா.இராதாகிருஷ்ணன் நினைவு விருது" கம்பவாரிதிக்கு வழங்கப்பட்டது. இவ்விருது கம்ப இலக்கிய உலகில் உணர்வோடு செயற்பட்டுவருகின்ற ஒருவருக்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருவதாகும்.

இவ்வாண்டு - இந்த விருதுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள கம்பவாரிதி - மும்முறைகளில் கம்ப இலக்கியத்துக்குப் பாடுபட்டவராகக் காணப்படுகின்றார்.

பொதுவாக ஈழம் முழுவதிலும், சிறப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் கம்பவாரிதி ஆற்றிய கம்பராமாயணத் தொடர் சொற்பொழிவுகள், உண்மையாகவே கம்ப இலக்கியத்துக்குச் செய்யப்பட்ட உயர் கௌரவிப்புக்களாகவே கருதப்படத்தக்கன. அதுவும் கடும் போராட்டச் சூழ்நிலையில் , மின்சார வசதிகள் கூட இல்லாதிருந்த எண்பதுகள், தொண்ணூறுகள் காலப்பகுதியில் யாழ்ப்பாண மக்களின் அறிவுப் பசிக்கு விருந்தளித்த கம்பவாரிதியின் தொடர்சொற்பொழிவுகள் பெருஞ்சாதனைகளே.

குறிப்பாக - திருநேல்வேலி, கலட்டி, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை போன்ற இடங்களில் கம்பவாரிதியின் கம்பராமாயணச் சொற்பொழிவுகளுக்குப் பெருமளவு இரசிகர்கள் திரண்டார்கள்.

கம்பராமாயண இலக்கியத்துக்குப் பணியாற்றுவதற்காகவென, கம்பவாரிதி - கம்பன் கழகத்தை ஸ்தாபித்தார். 2005 ஆம் ஆண்டில் தனது வெள்ளிவிழாவைக் கொண்டாடவுள்ள அகில இலங்கை கம்பன் கழகத்தின் மூலம் - தன் நண்பர்களதும், அன்பர்களதும் உதவியுடன் 'கம்பவாரிதி' நடத்திய கம்பன் விழாக்கள், இலக்கிய விழாக்களுக்கு இலக்கண மாதிரிகளாக அமைந்து சிறந்தன.

'ஈழத்தமிழ் இலக்கிய உலகின் சிறந்த விழாவாகக் கம்பன் விழாவே திகழ்கிறது என்றால், அதற்குப் பின்நின்று உழைக் கும் கம்பவாரிதியின் ஆளுமை முக்கிய ஒரு காரணியாகும். நாட்டுச் சூழ்நிலையால் யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து கொழும்பு சென்றபோதும், தனது இலட்சியத்தில் தளராது தமிழகப் பேச்சாளர்களே வியக்கும் வகையில், 'கொழும்புக் கம்பன் விழாக்களை' நடாத்தி வருகிறார் கம்பவாரிதி. இவ்வகையில் இவ்விழாக்களூடு தனக்குப்பின் ஒரு பேச்சாளப் பரம்பரை உருவாகவும் வழிசமைத்துள்ளார்.

பேச்சால் மட்டும் கம்பன் புகழ் பரப்பிவருவதோடு அமையாமல், எழுத்துக்கலையாலும் பணியாற்றுகிறார் கம்பவாரிதி. அவரது முதல் நூல் கம்பராமாயணக் கட்டுரைகளின் தொகுப்பாகிய 'அழியா அழகு' என்பதாகும். பேராசிரியரும், புகழ்பெற்ற திறனாய்வாளருமான அ.ச.ஞானசம்பந்தன் - 'அழியா அழகு' நூலைப் பற்றிக் 'குறிப்பிடுகையில், 'கம்பனைப் பற்றிப் பலப்பல நூல்கள் வெளிவந்துள்ளன. திறனாய்வு முறையில் வந்த நூல்களுள் தலைமையிடத்தைப் பெறுகிறது ஜெயராஜின் 'அழியா அழகு' என்று கருத்துத் தெரிவித்துள்ளமையை நோக்கினால், கம்பவாரிதியின் கட்டுரைவன்மை புலனாகும்.

இவ்வாறு சொற்பொழிவு, விழா, எழுத்து என்கின்ற மும்முனைகளில் முயன்று, கம்ப இலக்கியத்தைப் பரப்பவெனப் பாடுபட்டுவரும் 'கம்பவாரிதி' ஜெயராஜிற்கு விருது வழங்கிக் கௌரவிப்பதன்மூலம், சென்னைக் கம்பன் கழகம் ஈழத்தமிழ் உலகினையும் கௌரவித்துள்ளது எனலாம்.

கம்பவாரிதிக்குக் கிடைத்த மற்றைய விருதானது - பேராசிரியர் அறவாணன் அறக்கட்டளையினரால் சென்னையிலுள்ள 'பொன்மணி வைரமுத்து மாளிகை'யில் வைத்து வழங்கப்பெற்றது. இது தமிழ்ச்சாதனையாளர் ஒருவருக்குச் சர்வதேச அளவில் வழங்கப்படும் விருதாகும். 2002 ஆம் ஆண்டுக்கான விருதையே, மேற்படி அறக்கட்டளையினர் கம்பவாரிதிக்கு வழங்கியுள்ளனர்.

2002 ஆம் ஆண்டில் கம்பவாரிதி ஆற்றிய பணிகளை மேற்படி அறக்கட்டளை அறிஞர்கள் சிலாகித்துப் போற்றியுள்ளனர். வழமையாக ஆற்றிவரும் கம்பன் கழகத்தினூடான விழாக்கள், சொற்பொழிவுகள் போன்றவற்றுக்காகவும், கொழும்பில்- வார இறுதி நாட்களில் நீண்டகாலமாக நடாத்திவரும் சித்தாந்த, திருக்குறள் வகுப்புகளுக்குமாக இச்சாதனை விருது வழங்கப்பட்டுள்ளது.

மேலும் சமூக, அரசியற்துறை சார்ந்த நூலான 'பழம் பண்டிதரின் பகிரங்கக் கடிதங்கள்' என்னும் நூலை வெளியிட்டமையும் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது. சர்வதேச அளவில் சிறப்பாக 'சுவிற்ஸர்லாந்தில்' மாபெரும் கம்பன் விழாவை நடாத்தியமைக்காகவும், கம்பன் கழகங்கள் இணைந்து உலக மாநாடுகள் நடாத்துவதற்கான மூல முயற்சிகளை மேற்கொண்டமைக்காகவும், இந்த அறக்கட்டளையினரால் 'கம்பவாரிதி', பாராட்டப்பட்டுள்ளார்.

இவ்விரு விருதுகளையும் பெறுவதற்காகச் சென்னைக்குப் பயணமாகியுள்ள, 'கம்பவாரிதி' ஜெயராஜ் இவ்வாண்டு சென்னைக் கம்பன் விழாவின் வழக்காடு மன்றம், பட்டிமன்றம் போன்ற நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளாரென்பதும் குறிப்பிடத்தக்கது. ❖

# மிருகங்கள் மூலம் பரவும் நோய்கள்

பகுதி 10

(அமீபியாஸிஸ் தொடர்ச்சி)

## அமீபியாஸிஸ் (AMOEBIASIS)




ஈமொய்த்த, கரப்பான் பூச்சிகள் உலாவிய, நிலத்தில் வைக்கப்படும் சாத்தியமுள்ள கடதாசிகளால் எண்ணை ஒற்றப்பட்ட கடதாசிகளில் நேரடியாகப் பொதி செய்யப்பட்ட உணவுகளை உண்ணல் சுகாதாரமற்ற உணவுப் பழக்கமாகும். பழங்களையும், கிழங்குகளையும் ஓடும் நீரில் நன்கு கழுவாது உண்ணல், மாங்காய்களைச் சுவரில் தேய்த்தும், அடித்தும் உண்ணல், காகம் குடித்த கள்ளைப் பருகுதல் போன்றவையும் சுகாதாரமற்ற உணவுப் பழக்கங்களுள் அடங்கும்.

சுகாதாரமற்ற இடங்களில் பந்து விளையாடுவதும், அமீபாத் தொற்றுக்கு வழிவகுக்கலாம். போர்க்காலத்தில் குண்டுகளாலும், ஷெல்களினாலும் - மலக்கூடங்கள் சிதைக்கப்பட்ட காலத்தில், மிகுந்திருந்த அமீபியாசிஸ் நோய், போர் ஒய்ந்தபின்னும் ஏன் குறையவில்லை என, நோயியல் நிபுணர் பரமேஸ்வரி சின்னப்பா தனிப்பட்ட அக்கறை எடுத்து ஆராய்ந்தார். யாழ்ப்பாணத்தில் வீதிகள் எங்கும் நாய்மலம் காணப்படுவதற்கும், இந்த வீதிகளில் சிறுவர்கள் பந்துவிளையாடுவதற்கும், அமீபியாஸிஸ் நோய்க்கும் தொடர்பு இருக்கலாம் எனச் சந்தேகித்த இவர், பல்வேறு இடங்களிலிருந்து நாய்மலமாதிரிகளைச் சேகரித்து சோதனை செய்தார்.

சோதனைக்கு உட்படுத்தப்பட்ட - நாய் மலங்கள் எல்லாவற்றிலும், அமீபாவின் சிறைப்பைகள் காணப்பட்டதாகவும், சிறுவர்கள் நாய்மலத்தூள் பரவியுள்ள வீதிகளில் நின்று கிரிக்கெட் விளையாடும் போது, மேலிருந்து வரும் பந்தைப் பிடிக்கும்போது, நாய்மலத் துணிக்கைகளும், அமீபாச் சிறைப்பைகளும் பந்தைப் பிடிப்பவரது வாயினுள் சொரியும் சந்தர்ப்பம் உண்டு எனவும், இதுவும் அமீபியாஸிஸ் நோய் மிகுந்திருப்பதற்கு ஒரு காரணமாக இருக்கலாம் என, டொக்டர் பரமேஸ்வரி சின்னப்பா கூறியுள்ளார்.

எவ்வகையிலாவது, ஒருவரது வாயின்மூலம், குடலை அடைந்த சிறைப்பைகள் ஒவ்வொன்றிலிருந்தும் நான்கு அமீபாக்கள் தோன்றிப் பின்பு எட்டாகப் பெருகி, நேற்றுப் பிரசுரித்த படத்தில் காட்டியுள்ளவாறு குடலைச் சேதப்படுத்தி, குடுவை வடிவக் குழிகளை ஏற்படுத்தும் போது, அடிக்கடி இரத்தம் கலந்த நாற்றம் மிகுந்த மலம் வெளியேறும்.

மூலநோயின்போதும் - இரத்தம் வெளியேறுவதால் சிலர் இதனை மூலநோய் எனத் தவறாக எண்ணுகின்றனர். சிகிச்சை பெறாது விடுவதால், குடலைத் தாக்கிய அமீபா - மண்ணீரல், கல்லீரல், சுவாசப்பை, மூளை போன்ற ஏனைய உறுப்புகளையும் தாக்கி, அதில் கட்டிகள் (**ABSCESS**) ஏற்பட வழிவகுத்து, உயிராபத்துக்குட்படுவதுண்டு. கட்டிகள் படத்தில் காட்டப்பட்டுள்ளன.

இரத்தம் கலந்த மலம் வெளியேறும் சந்தர்ப்பங்களில் **AOC** என்ற மலப் பரிசோதனையைச் செய்வித்து, அது அமீபியாஸிஸ் நோயா? இல்லையா என உறுதிசெய்துகொள்ள வேண்டும். **BINDER GUM** நிரப்பி விற்கப்படும் போத்தல் போன்ற ஏதாவது ஒரு அகன்ற வாயுள்ள போத்தலினுள் மலத்தின் (சீதப்பகுதி உட்பட) சிறுபகுதியை எடுத்து, மருத்துவ ஆய்வுகூடத்தில் கொடுத்து, இந்தப் பரிசோதனையைச் செய்விக்க வேண்டும்.

ச.ஆ.கோபாலமூர்த்தி

(தொடரும்)

# முருகனின் பெருமை



முருகனைப் பற்றி வழங்கும் வரலாற்றுக்கு - கந்த புராணம் என்று பெயர். கந்தபுராணத்தில் முருகன் சிறந்த வீரனாக உருவகம் செய்யப்பட்டுள்ளான். முருகன் பிறப்பு, வளர்ப்பு, தேவர்களுக்குப் பரிந்து அவர்களுக்குப் பகைவர்களான அசுரர்களை அழித்து, தன்னை அண்டியுள்ளவர்களுக்கு அபயம் அளித்தது ஆகிய வரலாறுகளைக் கந்தப் புராணத்திலே காணலாம். நம்பினவர்களுக்கு நன்மை தரும் ஒப்பற்ற தெய்வம் முருகன் என்பதே கந்த புராணக் கருத்து.

முருகு என்பது தனித்தமிழ்ச்சொல். முருகு என்னும் சொல்லோ முருகன் ஆயிற்று என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. முருகு என்றால் அழகு என்று பொருள். மணம், இளமை, தெய்வத்தன்மை என்ற பொருள்களும் உண்டு. ஆகவே, முருகு என்ற சொல்லுக்கு அழகு, மணம், இளமை, தெய்வத்தன்மை என்ற பொருளும் உண்டு.

அழகிலே மணம் உண்டு, மாறாத இளமைத்தன்மையும் உண்டு. தெய்வத்தன்மையும் உண்டு. ஆகவே, இயற்கை அழகைத்தான் முருகனாக வைத்து வணங்கினர் முன்னோர். நாளடைவில் இந்த இயற்கை அழகான முருகை - முருகனாக்கினார். தந்தை, தாய் கற்பித்தனர். பல திருவிளையாடல்கள் கற்பித்து, விழாச்செய்து போற்றி வணங்கினர்.

"ஆயிலும் மயிலம் அறமும் நிறமும்
அழகும் உடைய பெருமாளே..."

அதாவது "கூர்மையான வேற்படையும், மயில் வாகனமும், அறத்தைக் காக்கும் தன்மையும், கண்கவர் வண்ணமும், அழகும் அமைந்த பெருமையுள்ளவனே". இவ்வாறாக முருகனை அழகின் வடிவமாக, அருணகிரிநாதர் திருப்புகழில் பல விடயங்களில் போற்றுகிறார்.

அழகுள்ள இடத்திலேதான் முருகனை வைத்துப் போற்றினர் முன்னோர், மலை இயற்கை அழகுள்ளது. பசுமை நிறைந்த கொடிகள், கனிகள், பழுத்த மரங்கள், கண்கவர மலர்ந்து மணம்வீசும் மலர்கள் உடலுக்கும் உள்ளத்திற்கும் குளிர்ச்சி தரும் அருவிகள், அழகான பறவைகள், விலங்குகள் இவைகள் அமைந்த மலைகளை அழகுள்ளவை என்று சொல்லாதவர் யார்? இத்தகைய அழகிய மலைகளில் எல்லாம் அழகுத் தெய்வமாகிய முருகன் இருப்பதாக நம்பினர். இந்த நம்பிக்கையை அருணகிரிநாதர் கூறுகிறார்.

"அழகு திருத்தணி மலையில் நடித்தருள் பெருமாளே"

தூய்மையான இடத்திலே அழகு அமைந்திருக்கும். அழுக்கும், குப்பையும் நிறைந்த இடத்திலே அழகு எது? கள்ளங்கபடமற்ற தூய்மையான உள்ளம் அழகிய இடமாகும். அங்கு அழகுருவான முருகன் அமர்ந்திருப்பான் என்று கூறுகிறார் திருப்புகழாசியர்.

"செம்மனத்தார் மிகுந்த மாதவர்
நன்மை பெற்ற உளத்திலே மலர்
செல்வ சிக்கல நர்க்குள் மேவிய - பெருமாளே"

அறம் நின்ற மனத்தவரிடமும், மிகுந்த தவமுள்ளவரிடமும் செல்வம் நிறைந்த சிக்கல் நகரிலே வாழுகின்ற முருகனே! என்றார்.

உலகிலே துன்பங்கள் பலவற்றை அடைந்தவர்கள், இறுதியாக இறைவனைத்தான் சரணமாக அடைந்திருக்கின்றனர். இதன்மூலம், தங்கள் துன்பங்களை மறந்து இன்பத்தைப் பெற்றிருக்கின்றனர். இத்தகைய பெரியார்களிலே அருணகிரிநாதரும் ஒருவர். அவர் முருகனைக் குறித்துப் பாடிய பாடல்களிலே திருப்புகழ் சிறந்து விளங்குகின்றது.

அவர், அப்பாடல்களை முருகப்பெருமானுக்கு மலர் மாலைகளாக - வாடாத தமிழ் மலர் மாலைகளாகப் புனைந்து போற்றி இன்புற்றார். அப்பாடல்கள் இன்றும் அடியார்கள் உள்ளத்திலே அன்புத்தேனை ஊறச்செய்யும் அரும்பாடல்களாகத் திகழ்கின்றன.

அகத்தியருக்கு முருகனே தமிழைப் போதித்தான். சிவபெருமானுக்கும் தமிழின் சிறப்பை முருகன் மொழிந்தான். முருகனே ஒரு சிறந்த புலவன். முத்தமிழிலும் வல்லவன். தனக்குத் தமிழிலே பாடும் வல்லமையை அளித்தவன் முருகப்பெருமானே என அருணகிரிநாதர் முருகனைப் புகழ்ந்துள்ளார்..

கவிமாமணி காரை.எம்.பி.அருளானந்தன்

# சுதேச வைத்திய வளர்ச்சி பற்றி செயலகத்தில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

"சுதேச வைத்திய வளர்ச்சிக்காக கருத்திட்டம் ஒன்றை உருவாக்குதல்" தொடர்பான கலந்துரையாடலொன்று, நேற்றைய யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

வடக்கு - கிழக்கு மாகாண சுதேச வைத்தியபணிப்பாளர் இந்துமதி தர்மராஜா தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில், சுதேச மருத்துவ வளர்ச்சிக்காக ஐந்துபேர் அடங்கிய குழுவொன்று உருவாக்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது. இக்குழுவில் உள்ளூராட்சி சபையைச் சேர்ந்த ஒருவரும், சுதேச வைத்திய அதிகாரிகள் இருவர், தனியார் வைத்தியசாலை அதிகாரி ஒருவருமாக ஐந்துபேர் இக்குழுவில் இடம்பெறுவர்.

இக்கருத்தரங்கில் உள்ளூராட்சி சபையினர், பேராசிரியர் சண்முகதாஸ், மாகாண ஆளுநரின் செயலாளர் கணேசநாதன், சுதேச வைத்தியர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# அதிக லஞ்ச ஊழலில் 12 அரச நிறுவனங்கள்!

## லஞ்ச விசாரணைக்குழு தகவல்

(கொழும்பு)

லஞ்ச விசாரணை ஆணைக்குழுவினர் - அதிக லஞ்ச ஊழல்கள் இடம்பெறும் பன்னிரண்டு அரச நிறுவனங்களை இனங்கண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் பிரகாரம்- பொலிஸ் திணைக்களம், வனபரிபாலனத் திணைக்களம், நீதிமன்று, வாகனப் பதிவுத் திணைக்களம், சுங்கத் திணைக்களம், ஏற்றுமதி இறக்குமதி திணைக்களம், உணவுத் திணைக்களம், மத்திய பஸ் போக்குவரத்துச்சபை, பிரதேச செயலகங்கள், பிரதேச பொறியியலாளர் அலுவலகம் ஆகியவையே இனங்காணப்பட்டுள்ளன.

2001 ஆம் ஆண்டு லஞ்ச விசாரணைக்குழுவினால், 45 நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, 40 பேர் கைது செய்யப்பட்டனர். கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற லஞ்ச ஊழல்கள் சம்பந்தமான அறிக்கை வெளியீட்டின்போதே, இந்தத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டது.

# ஜோர்தான் தூதுவராலயம் மீது பக்தாத்தில் குண்டுத் தாக்குதல்!



(பக்தாத்)

பக்தாத்தில், ஜோர்தான் தூதுவராலயம் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலில், அங்கு கடமை புரியும் ஊழியர்கள் மற்றும் பாதுகாவலர்கள் எட்டு பேர் கொல்லப்பட்டனர்.

வாகனம் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டே வெடித்ததாகச் சொல்லப்படுகின்றது. குண்டு வெடிப்பு நடைபெற்ற இடத்திலிருந்து சுமார் ஆயிரம் மீற்றர்வரை சிதைந்த பாகங்கள் காணப்பட்டன.

குண்டுவெடிப்பின் பின்னர், அவ்விடத்தைச் சூழ்ந்த ஈராக்கியர்கள் - ஜோர்தானிய அரசர் அப்துல்லா மற்றும் அவரது தந்தை கசன் ஆகியோரது உருவப்படங்களை அடித்து நொருக்கினர்.

அமெரிக்கா - ஈராக்கிற்கு எதிராக ஏற்படுத்திய பொருளாதாரத் தடையினை அடுத்து, ஜோர்தான் ஈராக்கிடமிருந்து குறைந்த விலைக்கு எண்ணெயை வாங்கிக் கொண்டு, உணவுப் பொருட்களைக் கொடுத்து வந்தது.

இதேவேளை, சென்ற வாரம் சதாமின் இரு புதல்விகளுக்கும், அவர்களது பிள்ளைகளுக்கும் ஜோரதான் புகலிடம் கொடுத்திருந்தது.

ஆனால், ஈராக்கிற்கு எதிராக அமெரிக்காவினால் மேற்கொள்ளப்பட்ட போரில் - அமெரிக்காவுக்கு தனது நாட்டின் எல்லைப்பகுதியைத் தளமாகப் பாவிப்பதற்கு ஜோர்தான் அனுமதி கொடுந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.



உக்கிரேனியப் படையினர் IL 76 விமானத்தில் ஏறுவதற்கு முன் வரிசையில் நிற்கின்றனர்.



கிரனைட் தாக்குதலால் அழிக்கப்பட்ட வாகனத்துக்கு முன்னால் அமெரிக்கப் படைச் சிப்பாய்.

# லைபீரிய ஜனாதிபதியை வெளியேறுமாறு அந் நாட்டுக்கான ஐ.நா. பிரதிநிதி எச்சரிக்கை!



லைபீரிய ஜனாதிபதி சாள்ஸ் ரெயிலர் - நாட்டிலிருந்து வெளியேறாவிடின், போர்க்காலக் குற்றவாளியாகக் கருதி கைதுசெய்யப்படுவார் என, ஐக்கிய நாடுகள் சபையில் லைபீரியாவுக்கான பிரதிநிதி ஜக்கெஸ் கெலன் எச்சரித்துள்ளார்.

லைபீரியாவிலிருந்து நைஜீரியாவுக்கு அரசியல் தஞ்சம் கோரவுள்ளதாக தெரிவித்திருந்த லைபீரிய ஜனாதிபதி, அதனை தற்போது செயற்படுத்தவில்லை.

லைபீரிய ஜனாதிபதி - நாட்டில் இருந்து வெளியேறுவதற்கு முன்னர், அவருக்கெதிரான குற்றச்சாட்டுக்களிலிருந்து அவர் நீக்கப்படுதல் வேண்டுமென, லைபீரியாவின் முக்கிய போராளிக் குழுத் தலைவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

இதேவேளை, அமெரிக்கப்படையைச் சேர்ந்த வீரர்கள் - உலங்குவானூர்தி மூலம் தலைநகர் மொன்ரோவியாவுக்குச் சென்றுள்ளனர். இவர்கள், ஏற்கனவே அங்குள்ள மேற்கு ஆபிரிக்காவின் சமாதானப்படையினருடன் இணைந்து - லைபீரியாவில் மனிதநேயப் பணிகளை மேற்கொள்வதற்கு உதவிபுரிவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தலைநகரில் உணவுப் பொருட்களின் விலை பல மடங்காக உயர்ந்துள்ளது. போராளிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை விட, தலைநகரில் அரிசியின் விலை 20 மடங்கு உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



அமெரிக்கக் கொடியை தென்கொரிய ஆர்ப்பாட்டக் காரர்கள் தீயிட்டுக் கொழுத்துவதையும் - அதனை அமெரிக்கப் போர் வீரர்கள் அவதானித்துக் கொண்டிருப்பதையும் காணலாம்.

உலகவலம்

# அமெரிக்கப் படையினர் மீது நேற்று ஆர்.பி.ஜி. தாக்குதல்!

பக்தாத்தில் நேற்று ஈராக்கிய தீவிரவாதிகள் நடத்திய ஆர்.பி.ஜி. தாக்குதலில், அமெரிக்க ராணுவத்தின் வாகனமொன்று தீக்கிரையானது.

தாக்குதலின் பின் - அமெரிக்கப் படையினர் நடத்திய எதிர்த்தாக்குதலில், பாதை அருகில் நின்ற ஈராக்கியர் ஒருவர் கொல்லப்பட்டதாக - ரொய்ட்டர் படப்பிடிப்பாளர் 'ஒலெக் பெர்போவ்' தெரிவித்தார்.

தாக்குல் நடத்தப்பட்டபோது, வாகனத்தினுள் இருந்த நான்கு இராணுவத்தினரும் சிறுகாயங்களுடன் தப்பித்துக்கொண்டனர்.



நேற்றுமுன்தினமிரவு நடந்த துப்பாக்கிச் சண்டையில் இரு அமெரிக்கப்படையினர் கொல்லப்பட்டும் - ஒருவர் காயமடைந்தும் இருந்தார், இவர்களில் ஒருவர் ஈராக்கிய மொழிபெயர்ப்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது.


INTERACT CLUB

## இலவச கண்சிகிச்சை முகாம்

மத்திய கல்லூரி இன்ரறக்ட் கழகத்தால் 09, 10ம் (சனி, ஞாயிறு) திகதி களில் இலவச கண்சிகிச்சை முகாம் நடத்தப்படவுள்ளது. இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிக்றோம்.

காலம் : 09.08.2003, 10.08.2003 (சனி, ஞாயிறு)
காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை
இடம் : மத்திய கல்லூரி தம்பர் மண்டபம்

| | |
|---|---|
| தலைமை<br>Int.ச.சதீஸ்குமார்<br>(தலைவர், இன்ரறக்ட் கழகம்) | சிறப்பு விருந்தினர்<br>Rtn.A.பஞ்சலிங்கம்<br>(முன்னாள் தலைவர், றோட்டறிக் கழகம்) |
| பிரதம விருந்தினர்<br>Rtn.R.சுரேந்திரன்<br>(தலைவர், றோட்டறிக் கழகம்) | திரு.க.இராஜதுரை<br>(அதிபர், யாழ். மத்திய கல்லூரி)<br>திருமதி பிரியா கருணாரட்ண<br>(கண் வைத்தியர்) |
| நன்றியுரை<br>திரு.ம.பிரசாந்தன்<br>(பொறுப்பாசிரியர், இன்ரறக்ட் கழகம்) | அனுசரணை<br>கொழும்பு<br>ஹமி சரண நிறுவனம்<br>GAMI SARANA ORGANIZATION |

மாணவர்கள், பெரியோர்களுக்கு கண் நோய்களுக்கான சகல வைத்திய பரீட்சைகளும் இலவசமாக செய்யப்படும். ரூ.3500க்கு மேல் பெறுமதியான பலரகக் கண்ணாடிகள் யாவும் ரூ.750க்கு வழங்கப்படும்.

அனைவரையும் பங்குபற்றிப் பலனடையுமாறு அழைக்கிறோம்.

இன்ரறக்ட் கழகம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.


# கைதிகள் விடுதலை தொடர்பான பலஸ்தீனத்தின் கருத்து தவறானது.

## இஸ்ரேலிய அரசு அறிவிப்பு

இஸ்ரேலிய சிறையில் இருந்த 300 பலஸ்தீனர்கள் விடுவிக்கப்பட்டமை, அமெரிக்காவைத் திருப்திப்படுத்துவதற்காகவே செய்யப்பட்டதாக பலஸ்தீனம் தெரிவித்திருந்த கருத்து தவறானது என, இஸ்ரேல் அரசு அறிவித்துள்ளது.

6000 பலஸ்தீனர்கள் சிறையில் இருக்கும்போது, 340 கைதிகளை மாத்திரம் இஸ்ரேல் அரசு விடுவித்துள்ளது. எனினும், 'காஸா' பள்ளத்தாக்கில் 340 பேர் விடுவிக்கப்பட்டமை உணர்ச்சிபூர்வமான ஒரு நிகழவாக நடந்தது.

தொடர்ந்தும் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என, இஸ்ரேலிய உள நாட்டு அமைச்சர் 'அவ்ரகாம் பொராஷ்' தெரிவித்தார். பலஸ்தீனிய பிரதமர் 'மஹ்மூட் அபாஷ்' பேச்சுவார்த்தையில் ஏற்படுத்திய முன்னேற்றத்தையும், வன்முறைகளைக் குறைத்துக் கொள்வதற்கு எடுத்த நடவடிக்கையையும் பாராட்டும் முகமாகமே, கைதிகள் தொடர்ந்தும் விடுவிக்கப்படுவர் எனக் கூறினார்.

இதேவேளை, உண்மையான



சமாதானத்தை அரபாத்தைவிட, அபு மேசன் நேசிக்கிறார் என இஸ்ரேலிய உள்நாட்டு அமைச்சர் போராஸ் குறிப்பிட்டுள்ளார்.

# லைபீரிய அகதிகளுக்கு தஞ்சம்; பிரித்தானியா இணக்கம் தெரிவிப்பு!

பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் லைபீரியாவிலிருந்து சென்று சியராலியோனில் வாழ்ந்துவரும் அகதிகளுக்கு தஞ்சம் கொடுப்பதற்கு,



பிரித்தானியா முன்வந்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான அமைப்பின் திட்டத்தின் அடிப்படையில் - இவர்களை அகதிகளாக ஏற்றுக்கொள்வதற்கு பிரித்தானியா முன்வந்துள்ளது.

சட்டத்திற்கு மாறான ஆட்கடத்தலை தடுக்கும் நோக்கில் ஒக்ரோபர் மாதத்தில் லைபீரிய அகதிகளை ஏற்றுக்கொள்ள பிரித்தானியா இணங்கியுள்ளது.

வழமையான நடைமுறையின் பிரகாரம் பிரித்தானியாவிற்குள் அகதித் தஞ்சம் கோரும் ஒருவர், தஞ்சம் கோருவதற்கு முன்பு தங்கியிருந்த நாட்டில் - தஞ்சம் கோரவேண்டும்.

1951 இல் ஜெனீவாவில் ஏற்படுத்திய உடன்படிக்கையின் பிரகாரம், ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான அமைப்பின் ஊடாக இந்த அகதிகளை ஏற்கவுள்ளதாக - பிரித்தானியா தெரிவித்துள்ளது.

அமெரிக்கா, வட ஐரோப்பிய நாடுகளான நோர்வே, டென்மார்க் ஆகிய நாடுகள் ஜெனிவா உடன்படிக்கையின் மூலம் அகதிகளை ஏற்றுக்கொள்ள முடியும் எனவும், இங்கிலாந்தின் உள்நாட்டு அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# நீதிவானை வழிமறித்த நான்கு பேர் கைது!

நீதிவான் சென்ற காரை வழிமறித்ததுடன், அவதூறாகப் பேசிய நான்கு நபர்களை, பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

நேற்றுமாலை 5 மணியளவில் நீதிமன்றம் சென்றுவிட்டு, வீடு திரும்பிக் கொண்டிருந்த நீதிவான் விக்னராஜாவின் காரை, நால்வர் - திருக்குடும்பக் கன்னியர்மடம் வீதியில் வைத்து தொடர்ந்து செல்லவிடாது மறித்ததுடன், அவதூறாகவும் பேசியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து, அந்த நால்வரையும் பொலிஸார் கைதுசெய்து - யாழ். பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றதுடன், மேற்படி நபர்கள் மதுபானம் அருந்தியுள்ளனரா என்பதை அறிய, யாழ். போதனா வைத்தியசாலையில் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தினர்.

இவர்கள் நால்வரையும் - இன்றைய தினம் நீதிமன்றில் பொலிஸார் ஆஜர்படுத்தவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## தாயக அணி வெற்றி

லண்டன் சென்றுள்ள தாயக வலைப்பந்தாட்ட அணி, பிறிக்ரன் பாறோ அணியுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற நான்கு சுற்றுக்களைக் கொண்ட போட்டிகளில் பிரித்தானிய அணியை 33:27 என்ற அடிப்படையில் வெற்றிகொண்டுள்ளது.

## புலிகளுடனான....

பினை வெளியிடுவது என்பது, தமிழீழ விடுதலைப் புலிகள் திட்டவரைபு தொடர்பாகப் பதிலளித்த பின்னரே சாத்தியமாகும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இடைக்கால நிர்வாகத்தை- விடுதலைப் புலிகளுக்கு வழங்குவதை எதிர்த்து பொதுஜன ஐக்கிய முன்னணி குற்றஞ்சுமத்தி வருகின்றமை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அமைச்சர், புலிகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்குவதாகப் பொதுஜன ஐக்கிய முன்னணி குற்றஞ்சுமத்துகிறது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில்- இந்திய உயர்ஸ்தானிகராயிருந்த டிக்சிற், பிரபாகரனிடம் பெரும்பான்மை பற்றி குறிப்பிட்டிருந்தது, பொதுஜன ஐக்கிய முன்னணிக்குத் தெரியாதா என, பீரிஸ் கேள்வி எழுப்பினார்.

இடைக்கால நிர்வாகத்திற்கு முன்னர் இறுதித் தீர்வு என்ன என்பது பற்றி தெரிவிக்குமாறு பொதுஜன ஐக்கிய முன்னணியினர் கேட்கின்றனர். அவர்களிடம் நான் கேட்கின்றேன். இறுதித் தீர்வு வழங்கப்பட்டால் இடைக்கால நிர்வாகத்தின் தேவை என்ன? இறுதித் தீர்வுக்கு முன்னால் இடைக்கால தீர்வு தேவையில்லையே? எனவும் பீரிஸ் குறிப்பிட்டார்.

தனிநாடாகப் பிரிந்துபோய் விடும் என்று பொதுஜன ஐக்கிய முன்னணி பழிசுமத்துகின்றது. இடைக்கால நிர்வாகத்தை வழங்கினால் இவ்வாறு நிகழும் என்று பொதுஜன ஐக்கிய முன்னணி குறிப்பிடுவது தவறாகும் என்று பீரிஸ் குறிப்பிட்டார்.

## சிறுவனைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

பாடசாலைக்குச் சென்ற சிறுவனொருவன் வீடுதிரும்பவில்லையென, தாயார் நேற்றைய தினம் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

யாழ். ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த சந்திரன் நிசாந்தன் (வயது 11) என்னும் சிறுவனே, கடந்த 5 ஆம் திகதி புனித பத்திரிசியார் கல்லூரிக்குச் சென்றிருந்தவேளை, காணாமற்போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## இடைக்கால....

கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதாக, ஜனாதிபதி செயலக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் - ஜனாதிபதியின் ஆலோசகரும், நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கதிர்காமரும் சமுகமளித்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - பிரதமர் ஜனாதிபதிக்கு பிரதமர் கடிதம் ஒன்றினை முன்னதாக அனுப்பிவைத்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக கட்டமைப்புத் தொடர்பாக அனுப்பப்பட்ட திட்டவரைபும், தாம் ஜனாதிபதிக்கு அனுப்பிய பிரதியும் முரணபட்டதாகத் தெரிவித்த குற்றச்சாட்டை மறுத்த பிரதமர், இந்த விடயம் தொடர்பாக விளக்கமளிக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருந்தால், நேரடியாகத் தமக்கு அறிவித்திருந்தால் விளக்கியிருக்கமுடியும் எனவும் குறிப்பிட்டதன் அடிப்படையிலேயே இச்சந்திப்பு இடம்பெற்றது.

இதேவேளை - இந்த விடயம் தொடர்பாக பிரதமர் ஆளும்கட்சி உறுப்பினர்களுக்கும் விளககியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (01)

# சேதமடைந்த தென்னை மரங்களை மதிப்பீடுசெய்ய ராணுவம் அனுமதி!

(தென்மராட்சி)

தென்மராட்சி மற்றும் நாகர்கோவில் - உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில், கடந்தகால யுத்த நடவடிக்கையின்போது, சேதம டைந்த தென்னை மரங்களின் சேதங்களை மதிப்பீடு செய்வதற்கு, இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

கிளாலி, முகமாலை, எழுதுமட்டுவாள் வடக்கு மற்றும் தெற்குப் பகுதி, மிருசுவில், நாகர்கோவில் ஆகிய பகுதிகளிலுள்ள தென்னந் தோட்டங்களுக்குச் செல்வதற்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பெருந்தோட்டத் திணைக்களத்தால் கிராம அலுவலர் ஊடாக, அனுப்பப்பட்ட சேதவிபரம் கோரும் படிவத்தைப் பூர்த்திசெய்து, விண்ணப்பித்தவர்களின் மதிப்பீடுகளை நேரில் பார்வையிடுவதற்கு - தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை உத்தியோகத்தர்கள், காணி உரிமையாளர்கள் ஆகியோர் பார்வையிடவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 12ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை - தென்னைப் பயிர்ச்செய்கை சபை உத்தியோகத்தர்களுக்குக் காணிகளைப் பார்வையிடுவதற்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

மேற்படிப் பிரதேசத்தின் காணி உரிமையாளர்கள், சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபரிடம் அனுமதிக் கடிதத்தினைப் பெற்று, மிருசுவில் இராணுவ அதிகாரியிடம் ஒப்படைத்து, தமது தோட்டங்களைப் பார்வையிடுமாறு, வடமாகாண தெங்குச் செய்கையாளர் கழகத்தின் தலைவர் அ.நல்லதம்பி தெரிவித்துள்ளார்.

## சமகாலக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சமகால அரசியல் கருத்தரங்கு என்னும் அரசியல் விழிப்புணர்வு கருத்தரங்குத் தொடரில் "தமிழீழத்தின் கடல்வளங்களும் மீனவர்கள் எதிர்நோக்கும் சவால்களும், என்ற தலைப்பிலான கருத்தரங்கு, இன்று காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி.அ.சூசை ஆனந்தன் கருத்துரை வழங்கவுள்ளார்.

சமகால அரசியல் ஆர்வலர்கள் இக்கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு, சர்வதேச மாணவர் பேரவையினர் கேட்டுள்ளனர்.

# சித்த மருத்துவ மாணவர்கள் பகிஷ்கரிப்பைக் கைவிட்டனர்!

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை மாணவர்கள் மேற்கொண்டுவந்த பகிஷ்கரிப்பு போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது.

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை முகாமைக் குழுவுக்கும், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களை அடுத்து, இந்தப் பகிஷ்கரிப்பைக் கைவிடத் தீர்மானித்ததாக, சித்த மருத்துவத்துறை மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

சர்வதேச மாணவர் பேரவையின் பங்களிப்புடன், சித்தமருத்துவத் துறையைப் பீடமாக்குவதற்கான செயற்பாடுகளுடன், அபிவிருத்தி செய்யவும் உறுதி அளித்ததை அடுத்தே, இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும், இதனையடுத்து - நேற்று முதல் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவது என முடிவு செய்யப்பட்டுள்ளதாக, மாணவர் ஒன்றியம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அத்துமீறிய 10 இந்திய மீனவர்கள்...

தொழிலாளர்களால் பிடிக்கப்பட்டனர்.

கடற்கரையிலிருந்து மூன்று கடல் மைல் தொலைவில் மீன்பிடித்துக் கொண்டிருந்த 'கவிதா' என்ற ட்ரோலரில் இருந்து, நாகபட்டினத்தைச் சேர்ந்த மீனவர்களான தங்கப்பன் சுப்பிரவேலு (வயது-23), தங்கப்பன் மகேந்திரன் (வயது-33), வைத்திநாதன் சுரேஸ் (வயது-26), மாணிக்கவேல் சுரேந்தர் (வயது-18), மாணிக்கவேல் வீரமுனி (வயது-30), 'நலாபதி' இழுவைப் படகிலிருந்து பழனியப்பன் செந்தில் (வயது-28), திருகோணம் பாலமுருகன் (வயது-29), திருகோணம் பழனிவேல் (வயது-27), திருகோணம் குமார் (வயது-22), திருகோணம் அமிர்தவேல் (வயது-20) ஆகிய பத்து மீனவர்களே பிடிக்கப்பட்டனர்.

பத்து இந்திய மீனவர்களும், அவர்களது ட்ரோலர்களும் கரைக்கு இழுத்துவரப்பட்டு, தனியார் வீடொன்றில் தடுத்து வைக்கப்பட்டனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக- இன்பருட்டி இராணுவத்தினருக்கும் தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு விரைந்த படையினர், பிரஸ்தாப மீனவர்களை பொலிஸாரிடம் ஒப்படைக்குமாறு, மீனவர்களிடம் கோரினர். இதனையடுத்து இருதரப்பினருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

மீனவர்களைப் பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மீனவர்கள் தடுத்துவைக்கப்பட்ட பகுதியில், இருநூறுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் குவிக்கப்பட்டு, மீனவர்களை கடத்திச் செல்லாதவாறு சுற்றிவளைத்துக் காவல் கடமையில் ஈடுபட்டனர். இதனால், இந்தப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

அப்பகுதிக்கு விரைந்த பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, கடற்படை அதிகாரிகள் அந்த மீனவர்களை விடுவிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இருந்தும் அம்முயற்சி பயனளிக்கவில்லை. இதனையடுத்து,

நள்ளிரவு 12 மணியளவில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளும் ஸ்தலத்திற்கு வந்து சேர்ந்தனர்.

கண்காணிப்புக்குழுவினரின் முன்னிலையில், மீனவர்களைப் பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்காக மேற்கொண்ட முயற்சி பலனளிக்கவில்லை. இதனால், அதிகாலை வரை இவர்களிடையே தொடர்ந்து முறுகல்நிலை காணப்பட்டது.

நேற்றுக்காலை மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி, 524 ஆவது பிரிக்கேட்டின் கட்டளை அதிகாரி தல்தா கொட, யாழ்.மாவட்ட அரசியற்துறையின் பிரதிநிதி இமையவன், கடற் தொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரி, பிரதேச செயலர் ஆ.சிவகாமி ஆகியோருடன் கண்காணிப்புக் குழுவினரும் பிரசன்னமாகியிருந்தனர்.

இவர்கள் முன்னிலையில், வடமராட்சி மீனவர்கள் இந்திய மீனவர்களால் இழைக்கப்படும் அநீதிகளை விரிவாக எடுத்துக்கூறினர்.

வடமராட்சி, தீவகம், மன்னார் கடற்பரப்பில் அத்துமீறி கடற்தொழிலில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் பெருமளவிலான வலைகளை அறுத்துச் செல்வதுடன், ஆயுதங்களைக் காட்டி அச்சுறுத்தி வருகின்றனர். நூற்றுக்கணக்கான அதிநவீன வசதிகள் கொண்ட இழுவைப்படகுகளில் மீன்பிடிப்பதனால் மீன்வளம் அழிந்து செல்வதுடன், எமது தொழிலாளர்கள் சிறிய தொழில்வளங்களைக் கொண்டு கடற்தொழிலைச் செய்ய முடியவில்லை. எனவே - இந்திய மீனவர் களை எமது கடற்பரப்பில் அத்துமீறி தொழில் செய்வதை கட்டுப்படுத்தவேண்டும். இதற்கு அனைவரும் பாடுபடவேண்டுமென தெரிவித்ததுடன்,

இந்திய கடற்தொழிலாளர்களையும் - தம்முடன் சந்தித்து மீனவர்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக இருதரப்பும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான சூழலை ஏற்படுத்த வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தனர்.

இதன்பின்னர் - சட்டத்தினை மதித்து கிராமசேவையாளரின் ஊடாக 10 இந்திய மீனவர்களையும் பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதேவேளை - இரண்டு இழுவைப் படகினையும், பொலிஸாரிடம் ஒப்படைக்கமாட்டோமெனவும், தமது பொறுப்பிலும், இராணுவத்தின் பாதுகாப்பிலும் இருக்குமென மீனவர்கள் தெரிவித்ததையடுத்து, கடும் வாக்குவாதப்பட்ட நில்லயில் மீனவர்களிடமிருந்து படகினை மீட்க முடியாத நிலையில் பொலிஸார் சென்றுவிட்டனர்.

வடமராட்சி மீனவர் கூட்டுறவுச் சங்கச் சமாசத்தின் செயலாளர் சூரியகுமாரிடம் அப்பகுதி கிராம அலுவலரிடம் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் வைத்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

இந்திய மீனவர்களின் வாக்குமூலம் பெறப்பட்டு வருவதாகவும், பத்து இந்திய மீனவர்களையும் வாக்குமூலம் பெற்றப்பட்ட பின்னர், இவர்களைப் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக, பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (09,ரா)

## குரங்குப்...

தலைவர் தமிழ்ச்செல்வன் முகாம் அமைந்துள்ள பகுதி தம்க்கு சொந்தம் எனவும், அவ்விடத்தை பார்வையிடுவதையும் தான் விரும்பவில்லை எனவும் - அம்முகாமை அகற்றுமாறு அரசும், கண்காணிப்புக் குழுவும் கேட்டிருப்பது நீதியற்ற செயல் எனவும் தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## கடல் மோதல்....

புக்குழுவின் பிரதித் தலைவர் ஹொக்லண்ட் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கண்காணிப்புத் தொடர்பாக - போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினால் தயாரிக்கப்பட்ட திட்டவரைபு, அரசாங்கம் மற்றும் எதிர்க்கட்சிகளால் பலத்த விமர்சனங்களுக்குள்ளாக்கப்பட்டதும்,

இதனையடுத்தே இருதரப்புடனும் பேசி புதிய திட்டவரைபு - தயாரிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

பெரியரசடி காடியன் கல்வி நிலையம் சாவகச்சேரி

O/L மாணவர்களுக்கான துரித மீட்டல் வினா -விடை வகுப்பு ஆரம்பம்

09-08-2003 சனி காலை 6.15 (பு.நே)

கணிதம்:- திரு V.நடேஸ்வரன் திரு K.பாஸ்கரன் விஞ்ஞானம்:- திரு K.காண்டீபன்

சனி, ஞாயிறு } காலை 6.15 - 8.15 (பு.நே)

குறிப்பு - தென்மராட்சியில் ஆசிரியர்களது மீட்டல் வகுப்பு இந்த நிலையத்தில் மட்டுமே நடைபெறும்.

தரம் 4 இற்கு புலமைப்பரிசிலுக்கு தயார்ப்படுத்துவதற்கான புதிய வகுப்பு ஆரம்பம் ஞாயிறு (10-08-2003) பி.ப 3.00

(446)

டொனால்ட் கணேஷகுமார் கிரிக்கெட் சுற்றுப்போட்டி

சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் 50 ஓவர்கள் கொண்ட டொனால்ட் கணேஷகுமார் கிரிக்கெட் சுற்றுப்போட்டி நாளை (09.08.2003) சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி அதிபர் திரு. க.இராசதுரை அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படும். யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள இப்போட்டியில் - சென்றலைட்ஸ் வி.க. (சொக்ஸ்) அணியை எதிர்த்து யாழ் பல்கலைக்கழக அணி மோதவுள்ளது.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

- சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக போட்டிக்குழு

(சி-1329)

இந்திய சாஸ்திரியார் வருகை



முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு வருகைதந்துள்ளார் பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற

S.N.குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும். (காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை)

ஸ்ரான்லி லொட்ஜ்

இல.711, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

T.P. 077 - 6080660, 021 - 2226188

(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)

(சி-1326)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 08.08.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.